சக்தி சக்திதாசனின்



# தமிழ்ப்பூங்கா



மலர் 5 இதழ் 21 நண்பர்களுக்கு மட்டும் இலவசம் இருமாதங்களுக்கொருமுறை டிசம்பர் 2008

ஆக்கம் : சக்தி சக்திதாசன் வடிவமைப்பு : சக்தி சக்திதாசன் வெளியீடு: சக்தி சக்தி சக்திதாசன்

## அன்பு வாசக நெஞ்சங்களுக்கு ரமடான், தீபாவளி, நத்தார், பொங்கல் வாழ்த்துக்கள்

## மகாகவிபாரதியார் நினைவுதினம் 11.09.2008







ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பதல்ல பெருமை
ஒவ்வொரு முறை விழுந்த போதும் எழுந்தான் என்பதுவே பெருமை



# இந்த இதழில்




1. எண்ணம்
2. எனது பாரதி
3. ஜெயகாந்தன் இதயத்திலிருந்து
5. தண்ணீரிலே மீன் அழுதால் (சிறுகதை)
6. கவிதைத்தூறல்
7. அரட்டை அய்யாத்துரை
8. சொல்லத் துடிக்குது மனசு (தொடர்கதை)
9. முத்துக்குளிக்க வாறீயளா ?
10. அந்தோணி முத்துவின் வண்ண மலர்கள் !
12. ஏதாவது எழுதலாமே
13. வைரமுத்துவின் வார்ப்புக்களோடு !
14. ஒரு இந்துவின் பார்வை
16. சிறப்புக் கட்டுரை --- என்.சுரேஷ்
17. இலக்கியச்சோலை
18. இந்த இதழில் மலர்ந்தவர்
20. துருவ நட்சத்திரம்
21. அறிவியல் பூங்கா
22. சிரித்து வாழ வேண்டும்
22. அறிவிப்புக்கள்




அனைத்து வாசக நெஞ்சங்களுக்கும் அனைத்துப் பெருநாள் வாழ்த்துக்கள்

தமிழைப் பாடுவோம் ! தமிழைப் பாடுவோரைப் பாடுவோம்

# எண்ணம் ---- 21



" பொருளாதார நெருக்கடி " ( Credit crunch ) யாரைப்பார்த்தாலும் அவர்களின் சம்பாஷணை இந்த வட்டத்தைச் சுற்றியே வந்து கொண்டிருக்கிறது.

முதலாளித்துவம், சோசலிஷம், கம்யூனிசம் என்று எத்தனையோ "இசங்கள்" உருவகியாயிற்று. அதை ஆதரிக்கும் நபர்கள யாரைக் கேட்டாலும் அடிப்படை மனிதனின் வாழ்வைச் சோபிக்க வைப்பதே தமது " இசத்தின் " முக்கிய நோக்கம் என்று திட்டவட்டமாகக் கூறி விடுகிறார்கள்.

ஆனால் வாழ்வின் அடிப்படியில் இருக்கும் இந்த அடிப்படை மனிதனோ இன்னும் அந்தப் படியை விட்டு ஒரு அங்குலமாவது நகர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்தக் கொள்கை முழக்கத்தின் தலைமைப்பீடத்தில் இருப்பவர்களோ மிகவும் நவீன வசதிகளுடன் இந்த அடிப்படை மனிதனின் முன்னேற்றத்தைப் பற்றி முழங்கிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

அப்படியானால் இந்தப் "பொருளாதார நெருக்கடி" யாரை அதிக அளவில் தாக்குகிறது ?. ஒருவேளை உணவுக்குத் தவிக்கும் மனிதன் இன்னும் அதே ஒருவேளை உணவைத் தேடி ஓடிக்கொண்டுதானிருக்கிறான்.

தமக்குச் சேர்த்து முடித்துத் தம் தலைமுறையின் வாழ்க்கையின் மகிழ்ச்சிக்குச் சேர்த்துக் கொண்டிருப்பவர்கள் ....... ஓ அவர்களைத் தான் இந்த நெருக்கடி நெருக்குகிறதோ ?
அதோ ! அறுசுவை உணவை அனுபவித்து விட்டு சோபாவில் அமர்ந்து ஆறுதலாக பொருளாதார நெருக்கடியைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் அவர்கள் ..... ஓ ! அடிப்படை மனிதனைப் பற்றிக் கண்ணீர் வடிக்கிறார்களோ ?

மீண்டும் சந்திக்கும் வரை
அன்புடன்
சக்தி சக்திதாசன்

# எனது பாரதி



செப்டெம்பர் 11ம் நாள். மகாகவி பாரதியின் நினைவுநாள். தமிழன்னையின் தலைமைந்தன் நான் என்று மார்தட்டிப் புறப்பட்ட இந்த மாபெரும் கவிஞன், யானையின் காலால் உதைக்கப்பட்டு படுக்கையில் விழுந்து, கொஞ்சம் கொஞ்சமாக தனது வாழ்வை இழந்தவன்.

சொல்லுக்கும், செயலுக்கும் வேறுபாடின்றி கவிதையாகவே தனது வாழ்வை வாழ்ந்து முடித்த உன்னத மனிதன் தான் மகாகவி பாரதியார்.

தனது எழுத்துக்களை தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவன் பாரதி. தன்னுடைய எண்ணத்தில் எழுந்த உணர்ச்சியலைகள கவிதை வடிவிலும், கட்டுரை வடிவிலும் மக்கள் மத்தியில் தெளித்தவர் இந்த ஞானி.

இத்தகைய ஒரு அற்புத படைப்பாளி மற்றைய படைப்பாளிகளுக்கு அன்று கொடுத்த அறிவுரை என்னவென்று அவருடைய இந்த நினைவுநாள் வரும் வேளையிலே நினைவு கூர்வோம் வாருங்கள்.

"கவிதை எழுதுவோன் கவியன்று, கவிதையே வாழ்க்கையாக உடையோன்,
வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி"

என்றான் என் புரட்சிப் பாவலன் பாரதி. என்ன இவன் புரியாமல் பேசுகிறானே ! கவிதையே வாழ்க்கையாக ஆகி விட முடியுமா? என்ற கேள்வி உங்கள் மனதினில் எழுவது இயற்கையே.. இங்கே பாரதி சொல்ல வந்த கருத்தை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். கவிதை எழும் மனதில் ஈரம் சுரக்கும், மனிதாபிமானம் மேலோங்கி நிற்கும் இது பொதுப்படையாகக் காணும் ஒரு உண்மை.

ஆமாம் ! நெஞ்சில் ஈரத்தோடு, மனிதாபிமானம் மிக்கவர்களாக வாழ்வதே ஒரு கவிதை என்கிறான் எம் ஞானக் கவிஞன்.கவிதை எழுதினால் தான் கவிஞர்களல்ல, நல்ல மனிதர்களாக, மற்றவர்களை நோக்கிய மனிதாபிமானப் பார்வை கொண்டவர்களாக, கருணையுள்ளம் நிறைந்தவர்களாக வாழ்ந்து விட்டீர்களானால் நீங்களும் கவிஞர்களே என்கிறான் எம் பாரதி.

இனி அவரது எழுத்தாளர்களை நோக்கிய ஒரு கட்டுரையைப் பார்ப்போம் வாருங்கள்.

1. தம்பி, உள்ளத்தில் உண்மை இருந்தால், கையில் எழுதுகோலை எடுத்துக் கொள், எழுது.

2. கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம் ஒரு பத்திரிகை விஷயம் எது எழுதினாலும்,வார்த்தை, சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது.

3.பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து அதாவது ஜனங்களுக்குச் சற்றேனும் பழக்கமில்லாமல், தனக்கும் அதிகம் பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும், சந்தேகமில்லை. ஆனாலும் ஒரு வழியாக முடிக்கும்போது, வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப் பார்த்துக் கொள்ளுதல் நல்லது. அல்லது, ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் பழக்கம் வைத்துக் கொள்ளவேண்டும்.

4. சொல்ல வந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டி வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்றுமில்லாமல் நடை நேராகச் செல்ல வேண்டும். முன் யோசனை இல்லாமலே நேராக எழுதும் திறமையை வாணி கொடுத்து விட்டால் பின்பு சங்கடமில்லை. ஆரம்பத்திலே, மனதிலே கட்டி முடித்த வசனங்களையே எழுதுவது நன்று.

5. உள்ளத்தில் நேர்மையும் தைரியமும் இருந்தால், கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைர்யம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டி மாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும். வாலைப் பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது.

6. வசன நடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்கும் உடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமானது தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை.

7. நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்தில் தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக் கொண்டால் கை நேரான தமிழ்நடை எழுத ஆரம்பிக்கும்.

அன்பு உள்ளங்களே ! இந்த உணர்ச்சிக் கவிஞன், உண்மை மனிதன் நமக்குச் சொல்லி விட்டுப் போனது என்ன. உண்மையை எழுது அதை எழுத முடியாமல் இருந்தால் பொய் எழுதுவதையாவது நிறுத்திக் கொள் என அழகாக அற்புதமாக இந்த தமிழன்னையின் தலைமைந்தன் எமக்கு ஆணித்தரமாக கூறி வைத்துள்ளான்.

இந்த பாரதியார் நினைவுநாள் வரும் காலகட்டத்திலே நாம் இதையாவது மனதிலே வரித்துக் கொள்ள வேண்டும். சிலநேரங்களிலே, சில காரணங்களினால் எவ்வளவு உண்மையானவனாக இருந்தாலும் அதை அப்படியே எழுத்து வடிவில் கொண்டு வருவதில் சிரமம் இருக்கலாம். ஆனால் எக்காரணம் கொண்டும் எமக்கு பொய் என்று தெரிந்த ஒரு விடயத்தை எழுத்து வடிவில் கொண்டுவருவது ஞானத்துரோகம் ஆகும்.

மகாகவி பாரதியார் வாழ்ந்து, மறைந்து விட்டார் ஆனால் அவரது நினைவுகள் எம் மனங்களில் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டுதானிருக்கிறது.சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட அனைத்துக் கஷ்டங்களையும் பொதுவாழ்க்கைக்காகப் பொறுத்துக் கொண்ட இந்த உன்னத மனிதனை உதாரணமாகக் கொண்டு உள்ளத்தெளிவோடு வாழப்பழகிக் கொள்வதுதான் தமிழ் உலகம் போற்றும் மகாகவிக்கு நாம் செய்யும் நினைவாஞ்சலி ஆகும்.

ஆக்கம் : சக்தி சக்திதாசன்     நன்றி : "வெங்கட்ராமன் விக்கி" இணையத்தளம்



பாரதியார் பிறந்த வீடு



பாரதியார் மனைவி செல்லம்மாவுடன்



பாரதியார் இருந்த சிறை

நன்றி : "பாரதியார் சரித்திரம்" இணையத்தளம்

<u>தண்ணீரிலே மீன் அழுதால்........ ( சிறுகதை)</u>



" என்ன மஞ்சு இந்த சார்ட்டை நீ வாஷிங் மெஷினில போடவேயில்லையா! " மிகவும் ஏமாற்றத்துடன் ஒலித்தது வாசுவின் குரல்.

" சும்மா போ ! நான் பண்ணல்லேன்னா நீ பண்ணிக்கிறதுதானே! என்னமோ வாஷிங் மெஷின் போடுறது பொம்பளங்க வேலை என்னு சொல்றாப்போல இருக்கே" கொஞ்சம் செல்லமாகக் கடிந்து கொண்டாள் மஞ்சு.

இது தினமும் அந்த வீட்டுல காலையில நடக்குற செல்லமான சண்டைதான்.

அவசரமாகக் கால்களில் ஷூவை மாட்டிக் கொண்டே,

" சரி லேட்டாயிடுச்சு நான் புறப்படுறேன், டேக் கெயர் மஞ்சு, ஐ லவ் யூ" சொல்லிக் கொண்டே கதவைத் திறந்த வாசுவிடம்,

" வாசு, சாயந்தரம் நீ வர லேட்டாகுமா, சுதந்திராவுக்கு பேரண்ட்ஸ் ஈவினிங் இருக்கு, நீ வரல்லேன்னா நான் போயிடுறேன்" என்ற மஞ்சுவைப் பார்த்து

" இல்லே நீ போயிடு மஞ்சு, எனக்கு மீட்டிங் இருக்கு என்ன டைம் முடியும் என்னு சொல்ல முடியாது" என்றவாறே மறுபடியும் கிளம்ப முயற்சித்த வாசுவைப் பார்த்துப் புன்னகைத்தவாறே,

" சரி கவனமாப் பாத்து காரை ஓட்டு " என்றாள் மஞ்சு.

வாசுவின் கார் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு கதவைச் மூடிக் கொண்டு உள்ளே வந்தாள் மஞ்சு.

மெதுவாக குழந்தை சுதந்திராவின் அறைக்குள் நுழைந்தாள்.

சுதந்திரா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள், ஒரு நிமிடம் வைத்த கண்ணை எடுக்க முடியாமல் அந்தக் கள்ளம் கபடமற்ற குழந்தை முகத்தை ரசித்தாள்.

" ஏய் சுதந்திரா எழும்பும்மா, மணியாயிடுச்சு " என்றவாறே அவளை மெதுவாக உலுப்பினாள்.

"ம்.... கொஞ்சம் தூங்கிக்கிறேனேயம்மா" முனகினாள் சுதந்திரா.

தாயின் விடாமுயற்சியினாள் கண்களை வலுக்கட்டாயமாகத் திறந்து, தள்ளாடியவாறு குளியலறையை நோக்கி நடந்தாள்.

குழந்தையை ஸ்கூலில் இறக்கி விட்டு விட்டு காரைத் தனது தோழி ராணி வீட்டை நோக்கிச் செலுத்தினாள்.

அவளைக் கண்டதும் முகமலர்ச்சியுடன்,

"என்னை ரெண்டு, மூன்று நாட்களாக உன்னை இந்தப் பக்கமே காணவில்லையே மஞ்சு" என்றாள் ராணி.

" வீட்ல கொஞ்சம் வேலை, அதனால தான் கிளம்பவே முடியல்ல" என்ற மஞ்சுவைப் பார்த்த ராணி,

" என்ன இன்னிக்கு ஆபிஸ் லீவா?" என்றாள்.

" இல்லே ராணி, சாயந்தரம் சுதந்திராவோட ஸ்கூல்ல பேரண்ட்ஸ் ஈவினிங், வேலைக்குப் போனா சீக்கிரம் கிளம்ப முடியாது, அதனாலே தான் லீவு போட்டுட்டேன் " என்றாள் மஞ்சு.

" ஏன் மஞ்சு, வாசு பேரண்ட்ஸ் ஈவினிங் வர்றதில்லையா ? " என்றாள் ராணி.

அவளது கேள்வியில் ஒரு ஆழ்ந்த அர்த்தம் பொதிந்திருந்ததை உணர்ந்தாள் மஞ்சு.

" அதெல்லாம் ஒண்ணுமில்ல, வாசுவுக்கு இப்போ ஆபிஸ்ல கொஞ்சம் வேலை அதிகம்...." இழுத்தாள் மஞ்சு.

காரில் உட்கார்ந்து வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்த மஞ்சுவின் மனதில் பழைய எண்ணங்கள் இலேசாகத் தலைதூக்கின.

அந்த எண்ணங்களின் அடிப்படையில் வாசுவின் பெருந்தன்மையான உள்ளம் அவள் முன்னால் காட்சியாகி நின்றது.

வாசுவைப் பற்றி நினைக்கையில் அவளையுமறியால் அவள் மனம் வாசுவுடன், பாஸ்கரை ஏறெடுத்துப் பார்த்தது.

பாஸ்கருடன் அவள் வாழ்ந்த அந்த ஐந்து வருட காலம் அவளுக்கு ஐந்து வருட சிறைவாசமாகவே பட்டது..

அவள் தந்தை சிதம்பரநாதனின் விருப்பப்படியே அவள் பாஸ்கரைத் தன் கணவனாக ஏற்றுக்கொண்டாள். பாஸ்கர் பார்ப்பதற்கு சுமாராக இருப்பான். லண்டன் யூனிவர்சிட்டியில் கட்டிடத்துறையில் டிகிரி முடித்து விட்டு ஒரு பெரிய நிறுவனத்தில் தலமை என்ஜினியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தான்.

அவளது தந்தையைப் பொறுத்தவரை பாஸ்கரை அவர் மாப்பிள்ளையாக அடைந்தது அவரின் பூர்வஜென்மப் பயன் என்றே எண்ணினார்.
மஞ்சு கூட அவனை ஆரம்பத்தில் விரும்பத்தான் செய்தாள் ஆனால் அவனின் குணம் அவளுக்குப் போகப்போகத்தான் புரிந்தது. அவள் தன் மனைவி என்பதை விட தான் பணம் கொடுத்து வாங்கிய ஒரு பொருளைப் போலவே நடத்தினான்.

அக்கவுண்டன்சித் துறையில் தனது படிப்பை முடித்திருந்த மஞ்சு, அரசு நிறுவனத்தில் மிகவும் முக்கியமான பதவியிலிருந்தாள். அவளது வேலையின் பளு காரணமாக பலசமயங்கள் இரவு நீண்ட நேரம் பணிபுரிய வேண்டியிருந்தது, எங்கே அவள் தன்னைவிட முக்கியமானவளாகக் கருதப்பட்டு விடுவாளோ என்னும் பொறாமை பாஸ்கரின் மனதில் பலமாக வேரூன்றியது.

விளைவு அவள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கினான். தேவையற்ற சந்தேகங்களுக்குள்ளானான். இம்சை தாங்க மாட்டாதவளாக, தந்தையிடம் தனது வேதனைகளைக் கொட்டித் தீர்த்தாள்.

தமது நாட்டின் காலாச்சாரத்தில் மூழ்கியவராக இருந்ததால், பெண்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்னும் பழைய பல்லவியைத் துணைக்கிழுத்து அவளைப் பணிந்து போகச் சொன்னார். அந்தக் காலகட்டத்திலேதான் தான் தனது இளவயதிலேயே தனது தாயை இழந்ததன் வலியை மிகவும் உணர்ந்தாள் மஞ்சு.

தந்தையின் அறிவுறுத்தலுக்குக் கொஞ்சம் செவிசாய்த்த வேளையிலே தான் அவள் கருத்தரித்தாள், கருவுற்றிருந்த வேளையிலே, அவளின் உடல்நிலை மீது அக்கறை கொண்டவனைப் போல அவளை அவளது வேலையிலிருந்து நிறுத்தினான் பாஸ்கர்.
அவனது உள் நோக்கம் அப்போது மஞ்சுவுக்குத் தெரியவில்லை. தன்மீது கொண்ட வாஞ்சைதான் அதற்குக் காரணம் என எண்ணினாள் மஞ்சு.

தான் அனுபவிக்கத் துடிக்கும் சுதந்திரத்தைத் தன் மகளாவது அனுபவிக்கட்டுமே என்றுதான், மகளுக்கு சுதந்திரா என்று பெயரிட்டாள். சுதந்திராவுக்கு இரண்டு வயதானதும் தான் வேலைக்குத் திரும்புவது பற்றிய பேச்சை எடுத்ததும் தான் பாஸ்கரின் உண்மையான வடிவம் அவளுக்குப் புரிந்தது.

அவள் கண்டிப்பாக வேலைக்குப் போகக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவிட்டான்.

அவனையும் மீறி அவள் சுதந்திராவைப் பார்ப்பதர்காக ஒரு குழந்தை பராமரிப்புத் தாதியை ஏற்பாடு செய்து விட்டு ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தாள்.

பாஸ்கரும் தனது அதிகாரங்களை இன்னும் இறுக்கமாக்கி அவளுக்கு எந்தெந்த வகையில் இடையூறு விளவிக்க முடியுமோ அவ்வகையிலெல்லாம் இடையூறு செய்தான்.

அப்போதுதான் அவள் ஆபிஸில் அவளுக்கு இணையாகப் பணிபுரியும் சுந்தரின் நண்பன் வாசுவைச் சந்தித்தாள்.

திருமணம் புரியும் தருணத்தில் அவனைக் கைவிட்டுச் சென்ற காதலியின் நினைவுகளில் இருந்து தன்னை மீட்டுக் கொண்டு வாழும் அவன், அவளின் பல மனக் குமுறல்களைச் செவிமடுக்கும் தோழனாகவே அமைந்தான்.
ஆனால் பாஸ்கரின் கண்களிலோ வாசு தனக்குப் போட்டியாக மஞ்சுவை அடைய நினைக்கும் எதிரியாகவே தென்பட்டான்.மதுவெறியுடன் வீடு வரும் பாஸ்கர் அவளைத் துன்புறுத்தத் தொடங்கி னான், இதையெல்லாம் பார்க்கச் சகிக்காத அவள் தந்தை சிதம்பரநாதன் அவள் தாயோடு போய்ச்சேர்ந்து விட்டார்.

அப்பொபொதுதான் அவளுக்கு தன் நிலை புரிந்தது.

அவள் தந்தையின் கடைசி ஆசையின் படி அவரது ஒரே மகளான மஞ்சுவே அவருக்கு இறுதிச்சடங்குகளைச் செய்ய முற்பட்டபோது, அவள் பெண் என்னும் காரணத்தைக் காட்டி பாஸ்கர் தடைவிதித்தான்.

அதுவரை பூவாக இருந்த மஞ்சு அப்போது தான் புயலானாள்.

அவனைத் துக்கியெறிந்து விட்டுத் தன் தந்தையின் இறுதி ஆசையை நிறைவேற்றினாள்.

அத்துடன் பாஸ்கரை விட்டு நிரந்தரமாகப் பிரிந்தாள். மதுவெறியில் அவளையும், சுதந்திராவையும் துன்புறுத்துகிறான் என்னும் அடிப்படையில் அவளுக்கு இலகுவாக விவாகரத்து வழங்கியது லண்டன் நீதிமன்றம்.

இத்தனை இடர்களிலும் அவளுக்கு உறுதுணையாக நின்றவன் அவள் உற்ற நண்பன் வாசு.

தனியாக குழந்தை சுதந்திராவுடன் வாழத் தொடங்கினாள். அவளின் வாழ்க்கை அமைதியான நதியாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது.

ஒருநாள் அவளுடைய பாஸ் அவளிடம் தவறாக நடக்க முற்பட்டான். ஆனால் அவனை நிறுத்தி அவள்க்குத் தகுந்த பாடம் புகட்டி விட்டாள் மஞ்சு. இருப்பினும் இந்த நிகழ்வு அவள் மனதை மிகவும் பாதித்து விட்டது.
மனமுடைந்து வாசுவிடம் " ஏய் வாசு, நான் தனியாக இருக்கிறேன் என்பதினால் தானே என்னை இத்தனை கீழ்த்தரமாக மதிக்கிறது இவ்வுலகம்? ஏன் நீ கூட அப்படித்தான் நினைகிறாயோ ? " என்று கேட்டதும் வாசு ஒரு முடிவுக்கு வந்தான்.

" மஞ்சு, நீ என்னை நம்புகிறாயா? "
என்றான்.
" என்னடா கேள்வி இது வாசு, உன்னை நம்பாமலா உன்னிடம் இத்தனை உரிமையுடன் நடந்து கொள்கிறேன்?" என்றாள் சினந்து கொண்டே மஞ்சு.
"சரி அப்படியானல் நீயும், சுதந்திராவும் என்னுடனேயே வந்து தங்கி விடுங்கள்"
.
திடுக்கிட்டு விட்டாள் மஞ்சு " என்ன? உனக்கு பைத்தியம் ஒண்ணும் பிடிக்கல்லையே ...? சுயநினைவுடன் தான் பேசுகிறாயா?"
" ஏய் மஞ்சு, இத்தனை காலம் நாம் என்ன காதலர்களாகவா பழகுகிறோம், பதில் சொல்லு" என்றான் வாசு அதட்டியபடியே.
"இல்லையே நண்பர்களாகத்தான் பழகுகிறோம், ஆனால் பார்ப்பவர்கள் ஏதும் பேச மட்டார்களா?......" தயங்கியபடியே கேட்டாள் மஞ்சு.
" மஞ்சு உன்னையும், சுதந்திராவையும் பாஸ்கர் துன்புறுத்தியபோது இந்தச் சமுதாயம் உனக்குத் துணை வந்ததா? நரம்பில்லாத நாக்கால் எதையும் வரம்பில்லாமல் பேசும் சமுதாயம், அதற்கு பயப்பட முடியுமா?" அவனது கேள்வியில் நிஜம் தலைவிரித்தாடியது.

வாசுவின் வீட்டில் வாழத் தொடங்கியதும் தான் அவனது பெருந்தன்மையின் வீச்சம் அவளுக்குப் புரிந்தது.

தனக்கு வரப்போகும் கணவன் எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என எண்ணினாளோ அதற்கு ஒருபடி மேலாக இருந்தான் வாசு.
இருவருக்குமிடையில் இருந்த நட்புணர்வு கொஞ்சம், கொஞ்சமாக காதலாக மலர்ந்தும் கூட அவன் தனது கண்ணியத்தின் கோட்டைத் தாண்டாமல் இருந்தது அவளை அதிசயிக்க வைத்தது.
குழந்தை சுதந்திராவுக்கும், வாசுவிற்குமிடையிலான அன்பு, ஏதோ முற்பிறப்பில் அவர்களுக்கிடையில் பிணைப்பு இருந்திருக்குமோ என்னும் எண்ணத்தை வரவழைத்தது.

காரை வீட்டின் முன்னால் நிறுத்தும் போதுதான் தனது பழைய நினைவுகளில் இருந்து மீண்டாள் மஞ்சு.

அன்றிரவு படுக்கையிலிருக்கும் போது மஞ்சு,
" வாசு, உன்னை ஒண்ணு கேட்டாத் தப்பாப் புரிஞ்சுக்க மாட்டியே ..." என்றாள்
" என்ன மஞ்சு சொல்லு " என்றான் வாசு.
" நாம ரெண்டுபேரும் கலியாணம் பண்ணிக்கிறது பத்தி உன்னோட அபிப்பிராயம் என்ன? " மஞ்சுவிடமிருந்து இந்தக் கேள்வியை எதிர்பார்த்திராத வாசு, திரும்பி அவளைப் பார்த்தான்.
" மஞ்சு, கலியாணத்துக்கு இப்ப என்ன ரொம்ப அவசரம், காதலர்களாக ஒண்ணா வாழுற பலர், கலியாணம் என்னும் பந்தத்துக்குள்ள நுழைஞ்சதுமே அவங்களுக்கிடையே இருக்கும் நட்பு அழிந்து போய்விடுகிறது. நமக்கும் அது நடக்க வேணுமா? இன்னும் கொஞ்சநாள் போகட்டுமே ..." என்றான் வாசு கனிவாக

அவனைப் பார்த்து முறுவலித்தவாறே திரும்பிப் படுத்தாள் மஞ்சு.

அன்று காலையிலிருந்து அலுவலகத்தில் கொஞ்சம் பரபரப்பாக இருந்தான் இருந்தான் வாசு. அப்போது அவனது தொலைபேசி அடித்தது,
"ஹலோ யார் வாசுவா? இங்கே அப்பா கனடாவிலேயிருந்து பேசறேம்பா"
"அப்பா, என்ன விஷயம் ரொம்ப நாளக்கப்புறம் உடம்புக்கு ஏதாச்சும்.."

கொஞ்சம் படபடப்பாகவே கேட்டான் வாசு. ஏறத்தாழ இரண்டு வருடங்களுக்கப்புறம் அப்பாவிடமிருந்து போன் கால். அண்ணா பிரகாஸும், அண்ணியும் அவனுடன் பேச்சு வார்த்தைகளை விட்டு இரண்டு வருடங்களாகிறது. கனடாவிலேயே செட்டில் ஆகி விட்ட அப்பாவும், பாவம் என்ன செய்வார்" அண்ணாவின் பேச்சைத்தானே கேட்க வேண்டும்.

"இல்லேப்பா, உடம்பெல்லாம் ஓ.கே. ஆனா எனக்கும் வயசாயிடுச்சு இல்லியா, அத்தோட உன்னைப்பத்தி இங்க கன்னாபின்னான்னு பேச்சு வேற.. அதுதான்..." இழுத்தார் அப்பா.

அவனுக்குப் புரிந்தது, அவன் மஞ்சுவோட வாழுறதைப்பத்தி அவனோட அண்ணாவும், அண்ணியும் கேள்விப்பட்டிருப்பாங்கா, அப்பாவின் காதை அரிச்சிருப்பாங்க

" வாசு, யார் என்ன சொன்னாலும் உன்னைப்பத்தி எனக்குத் தெரியும். எனக்கு கனடாவில கிடச்ச பணத்தையும், ஊரில இருக்குற நம்மோட நிலபுலங்களை வித்து வந்த பணத்தையும் சேர்த்தா உன் பங்கு ஏறத்தாழ 200,000 கனடா டாலர்கள். உன் பேருக்கு எழுதி வைச்சுட்டேம்பா... அதுதான் உனக்கும் தெரிஞ்சா நல்லதுதானே.. ஏதோ அம்மா இருந்தா அவ என்ன விரும்பியிருப்பாளோ அதைத்தான் செஞ்சிருக்கேன். ஏதோ பாத்து நடந்துக்கப்பா.." என்று அப்பா சொன்னதும் , வாசுவின் கண்களில் கண்ணீர் துளித்தது.

" அப்பா, நான் எப்போதுமே உங்க வாசுதாம்பா... பணமெல்லாம் இப்ப எதுக்கு.. ஒடம்பப் பாத்துங்கப்பா...நான் முடிஞ்சா உங்களை வந்து பாக்குறன்.." என்று சொல்லி தொலைபேசி அழைப்பைத் துண்டித்தான் வாசு.

ஏதோ அவசர பணியில் ஈடுதுாட்டிருந்த வாசுவின் தொலைபேசி மீண்டும் சிணுங்கியது,

" ஹலோ நான் டாக்டர் பேசுறேன், இன்னைக்குச் சாயந்தரம் நான் உங்களை அவசரமாகப் பாக்கணுமே" என்றார் டாக்டர் ஸ்மித்.

அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது, வயிற்றின் அடிப்பாகத்தில் வலிக்கிறது என்று சிலநாட்களுக்கு முன்னால் டாக்டரைச் சென்று பார்த்த போது அவர் அவனைச் சில பரிசோதனைகளுக்காக ஹாஸ்பிட்டலுக்கு அனுப்பியிருந்தார்.

"சரி டாக்டர் ஆபிஸிலேயிருந்து நான் உங்களை வந்து பாக்குறேன்" என்று சொல்லிவிட்டு, மஞ்சுவுக்கு போன் போட்டு சாயந்தரம் தான் வருவதற்கு நேரமாகும் என்று சொன்னான்.

அன்று ஏனோ அந்த டாக்டரின் சர்ஜரி மிகுந்த அமைதியாயிருந்தது. அவன் சென்ற உடனேயே அவனை டாக்டர் தன் அறையினுள் அழைத்தார்.

வாசுவின் மீது பரிதாபமான பார்வையை வீசிக் கொண்டே டாக்டர் அந்த திடுக்கிடும் செய்தியைக் கூறினார்.

அவன் வயிற்றில் கண்டிருப்பது கொடுமையான புற்றுநோய், அது ஏற்கனவே அவனது ஈரல் வரை பரவியிருப்பதால் அவன் இன்னும் எத்தனை நாட்களுக்கு உயிரோடிருப்பான் என்பது ஆண்டவன் கைகளிலேயே என்பதையும் விளக்கினார்.

வாசுவுக்கு தன் காதுகளையே நம்பமுடியவில்லை. அனைத்தும் ஏதோ கனவில் நடப்பது போலத் தென்பட்டது. மனம் ஏதோ ஜடமாகி விட்டது போன்ற உணர்வு.

அவனது கார் அவனையறியாமலே அந்தப் பூங்காவின் முன்னால் நின்றது.
உள்ளேயமர்ந்தவன் மனதில் ஆயிரம் கேள்விகள் தலைதூக்கியது.
" ஆண்டவா ! ஏன் எனக்கு? ..."
கண்களில் கண்ணீர் முத்து முத்தாய் உதித்தது.
ஓ ! மஞ்சுவும், சுதந்திராவும் எப்படி?.... நெஞ்சம் பதைத்தது. அவனது அப்பாவின் போன் கால் ஞாபகத்திற்கு வந்தது.
அவனது மனம் ஒரு தீர்மானத்திற்கு வந்தது. மோபைல் போனை எடுத்து நண்பன் சுந்தரத்தின் நம்பரைச் சொடுக்கினான்.
15 நிமிடங்களில் சுந்தர் அவனருகில் இருந்தான், மெதுவாக கண்ணீர்த் துளி களைச் சுண்டி விட்டவாறே, அவனது நிலையை அறிந்தான்.

"டேய் சுந்தர், நான் மஞ்சுவைத் திருமணம் செஞ்சுக்கிறதாக முடிவு செய்திருக்கேன்..." என்றான் வாசு.
"டேய் வாசு உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? அவளை விதைவையாக்குறதா முடிவு செஞ்சுட்டியா? எவ்வளவு சுயநல்மடா உனக்கு? ... கேள்வி மேல் கேளள்வியாய்க் கேட்டு அவனை துளைத்தான் சுந்தர்.
"டேய் சுந்தர் நீ என்னைப் புரிஞ்சிட்டுது இவ்வளவு தானாப்பா? என்னோட அப்பா எனக்கு எழுதியிருக்கிற சொத்து எதுவித பிரச்சனையுமில்லாம மஞ்சுவோட கைக்குப் போறதுக்கு இதைவிட்டா வேற வழி தெரியில்லையடா. " என்றான் வாசு
"வாசு, மஞ்சு இதுக்கு சம்மதிப்பாளா?" சந்தேகத்துடன் கூடிய தயக்கமான கேள்வி எழுந்தது சுந்தரத்திடமிருந்து.
"சுந்தர், இது ஒண்ணுமே திருமணம் முடியுமட்டும் அவளுக்குத் தெரிய வேண்டாம். என்னோட வாழ்வு இன்னும் ஒரு மூணுமாசம் தான், கலியாணம் முடிஞ்சதும் நான் எனது அப்பாவைப் பாக்குறதுக்காக கனடாவுக்குப் போயிடுறேன். என்னோட மரணத்துக்குப் பின் நான் தரும் கடிதத்தை மட்டும் அவளுக்குச் சேர்ப்பது உன்னோட பொறுப்பு...." வாசு சொல்லச் சொல்ல சுந்தரின் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது.
"டேய் வாசு நீ மனுஷனில்லடா, தெய்வம்" என்று கூறிக்கொண்டே அவனைக் கட்டியணைத்தான்.
" டேய் வாசு எப்பிடிடா உன்னால, இவ்வளவு திடமா இருக்க முடியுது? மீண்டும் கண்ணீருடன் சுந்தர்.
"
"சுந்தர், நானும் அழுகிறேண்டா ஆனா உனக்கு என்னோட கண்ணீர் தெரியல்ல, ஏன்னா நான் தண்ணிரிலே அழுகின்ற மீன்" புன்னகை சிந்தியவாறே நடக்கும் வாசுவின் உருவம் சிறுத்துக் கொண்டே போனது, ஆனால் சுந்தரின் கண்களில் மட்டும் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

ஆக்கம் --- சக்தி சக்திதாசன்

---

மகிழ்ச்சி எனபது இல்லாவிடில் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகி விடும்

பெர்னாட்ஷா

# கவிதைத்தூறல்

இம்முறை எனது கவிதைத்தூறலில் தெறிக்கும் கவிதைகளில் முதலாவதாக மாலதி மைத்ரி அவர்களின் கவிதை ஒன்று.

## கோடைத்துயில்

பருவங்களென எப்பொழுதும்
உனது நிகழ்வுகளை

பெய்தும் பொய்த்தும்
பூத்தும் காய்ந்தும்
உறைந்தும் தழுவியும்

எனது உடம்பு
தளும்பியும் நுரைத்தும்
பாய்த்தும் தேங்கியும்
வறண்டும்

எல்லாக் கோடையிலும்
உனது வரவை எதிர்நோக்கி
என் உடம்பில்
முட்டைகளையும் விதைகளையும்
பாதுகாத்தபடி

வசந்தத்தின் முதல் மழைக்கே
மண் நனைந்து
முலைகள் மொட்டவிழ்ந்து விடுகின்றன
மீன் குஞ்சுகள்
உடம்பில் உள்நிரம்பி மொய்க்கின்றன

- மாலதி மைத்ரி

இதோ புதியமதவி அவர்களின் அருமையா கவிதையொன்று

## மௌனத்தின் காரணங்கள்

புரிந்துகொள்ள முயற்சித்தேன்
பலரின் மவுனங்களை.
காரணங்கள் தேடித் தேடி
களைத்து விட்டது
கபாலத்தின்
மண்டை ஓடுகள்.
நட்பு என்றும் காதல் என்றும்
கொள்கை என்றும் தோழமை என்றும்
தமிழன் என்றும் இந்தியன் என்றும்
உறவுகள் என்றும்
உன்னதமாக போற்றிப் புகழப்பட்ட
தருணங்கள்
வெறும் கனவுகள் அல்ல
மீண்டும் மீண்டும்
எத்தனையோ சமாதானங்களை
எடுத்து வைத்து
காத்திருக்கும் போது
பளிச்சென
இருண்டவானத்தில்
இடியுடன் விழுகிறது
எரிதழலாய் மின்னல்
என் முப்பாட்டன்
நந்தனை எரித்த
தீயின் மிச்சமாய்.
பலரின் மவுனங்களுக்கான
காரணங்களைப் புரியவைக்க!.

- புதிய மாதவி,

## என்னோடு ஒரு இமைப்பொழுது

இசைபாடிச் செல்லும் கருங்குயிலே
இதழ்கொண்ட தேனருந்தும் வண்டினமே
தரைமீது தவழுகின்ற சிறு மண்துகளே
புல்மீது நடமாடும் சிறு பனித்துளியே
என்னோடு இமைப்பொழுது கழிக்காயோ

கிளைமீது பாய்ந்தோடும் அணிற்பிள்ளை
கிள்ளை மொழி பேசும் பச்சைக்கிளியே
கழுத்தில் செவ்வாரம் சூடிய வெண்புறாவே
பட்டுச்சிறகில் வண்ணம் சூடிய வண்ணத்தியே
என்னோடு இமைப்பொழுது கழிக்காயோ

விண்ணோடு தவழ்கின்ற வெண்ணிலவே
மழையாகிக் குளிர்கின்ற கார்மேகமே
ஒளிபாய்ச்சி சூடேற்றும் பகலவனே
கரையேறிக் கால்நனைக்கும் கடலலையே
என்னோடு இமைப்பொழுது கழிக்காயோ

உதிரத்தில் உறைந்து உள்ளத்தில் சுரந்து
உயிரோடு கலந்து உணர்வோடு இணைந்து
உருவாகும் கவிதைகளின் மூச்சாக வாழும்
உயர் தமிழன்னை தன்னின் பெருமை சொல்ல
என்னோடு இமைப்பொழுது கழிப்பீரோ

தனை மறந்த பொழுதுகளில் என்னில்
தானாக உதித்திடும் இக்கவி வரிகள்
தருகின்ற இன்பத்தின் கதை சொல்ல
தருவீரோ உம் வாழ்வின் கணங்கள் சில
என்னோடு இமைப்பொழுது கழிப்பீரோ

சக்தி சக்திதாசன்

## இதற்கொரு உலகம் ?

இல்லாத கதைகள் பல
பொல்லாத மனிதர் பேசி
நில்லாத காலம் தனை
செல்லாமல் ஆக்குகின்ற
பொழுதுக்கொரு உலகம் தேவைதானா?

இருக்கின்ற உள்ளங்கள் அனைத்தும்
இருட்டினில் வாழ்ந்து கொண்டே
இல்லாத உள்ளங்கள் வாழும்
இல்லங்களை மறக்கும் பொழுது
இதற்கொரு உலகம் தேவைதானா?

தனக்கென அனைத்தையும் சுருட்டி
தனியான குகைக்குள் வாழும் மனிதர்
தவிக்கின்ற உள்ளங்கள் நிலமை
தமை மறந்து குதிக்கின்ற பொழுது
இதர்கொரு உலகம் தேவைதானா?

இரக்கங்கள் இறக்கின்ற வேளை
இழைக்கின்ற கொடுமைகள் கோடி
இனிக்கின்ற வார்த்தைகள் பேசி
பறிக்கின்ற குழிகளோ ஆயிரம்
இதற்கொரு உலகம் தேவைதானா ?

நிஜத்தினை நிறுக்கின்ற வாழ்க்கை
நிழல்களை மதிக்கின்ற காலம்
நினைக்கின்ற எண்ணங்கள் யாவும்
நிறைக்கின்ற பேராசை ஆழி
இதற்கொரு உலகம் தேவைதானா ?

சக்தி சக்திதாசன்

# அரட்டை அய்யாத்துரை அளக்கிறார்



உஷ் ! சத்தம் வையாதேங்கோ உங்க உவன் ஒரு பொடியன் படுத்துக் கிடக்கிறான். ராத்திரி நல்ல குடி கண்டியளே ! ஹி....ஹி.... நானும் கொஞ்சம் குளிருக்கு பிராண்டி அடிச்சனான். அதிலே ஒரு பிழையுமில்ல. இந்தக் காலநிலையெல்லே மோசமாக மாறுது. அதால கொஞ்சம் கூடக் குளிர் கண்டியளே.

ராத்திரி உவங்கள் தண்னி அடிச்சுப் போட்டு ஓரே டிஸ்கஷன் தெரியுமோ ! அது வேற என்னையெல்லே நடுவர் மாதிரி ஐயா நீங்களே சொல்லுங்கோ எண்டு இக்கட்டில எல்லே மாட்டி விட்டுட்டாங்கள்.

அதுவும் உந்த அமெரிக்காவில நடந்த எலக்கூஷனைப் பத்தியெல்லே ஒரே விவாதம். அதுதான் உந்த புஷ்ஷிண்ட விசயமெல்லே முடிஞ்சு போச்சுதாம்.

அதெல்லே ஆரோ ஒரு கறுப்பனாம் "ஓபாமாவோ" " கூபாமாவோ " அவனெல்லே வெண்டிட்டானாம். ஆனா அவன் வெண்டா எங்களுக்கென்ன பாருங்கோ? உவங்கள் ஏதோ தங்கட வீட்டுக் கொல்லேக்க நடக்கிற தேர்தல் மாதிரியெல்லா கிடந்து கத்தினாங்கள்.

அதிலே உங்க ஒரு பொடியன் அதென்னண்டு கறுப்பன் அமெரிக்காவுக்கு தலைவரா வாறது... அப்பிடி.. இப்பிடி எண்டு ஏதோ தான் பெரிய வெள்ளை எண்டு நினைச்சு கத்துது. எனக்கெண்டா சிரிப்புத் தாங்க முடியல்லை.

அதுவும் கண்டபடி சிரிக்கவும் கூடாது உதுகள் சின்னப்பொடியள் தண்ணியைப் போட்டுட்டு நிக்குதுகள், ஆளக்கீளைத் தெரியாம கையை வைச்சுப் போடுவாங்கள் கண்டியளே !

அமெரிக்காக்காரரும் கொஞ்சம் லெவல் பாருங்கோ ஏதோ தாங்கள் தான் உலகத்துண்ட பொலிஸ்காரர் போல வெருட்டித் திரிஞ்சவை, சனங்கள் பரவாயில்லையாம் உந்த அரசியல்வாதியள் தான். எங்கயெண்டாலும் உந்த அரசியல்வாதியளுக்கு உதுதானே வேலை கண்டியளே!

ஆனா அவங்களிட்டதான் விசயம் இருக்குது. உலகம் சரியா இப்ப சிறுத்துப் போச்சுது தெரியுமே ! இல்லாட்டி இந்த அய்யாத்துரை அங்க ஊரில ஒரு குக்கிராமத்தில இருந்து இங்க சீமைக்கு வந்திருக்க முடியுமே ! எல்லாம் காலம்தான் தெரியுமே !

ஆனாப் பாருங்கோ இப்ப உலகத்திண்ட பொருளாதார நிலைமையெல்லே மோசமாப் போச்சுதாம். அதென்ன தெரியுமே? பேராசை கண்டியளே! ஆரை விட்டுது சொல்லுங்கோ. அவனிட்ட இருந்தா எனக்கு வேணும் எண்டு நினைக்கிற மனப்பான்மை தெரியுமே !

கடன் வாங்குறதெண்டா இந்தக்காலத்து மனிசருக்கு கற்கண்டு போல, அதுதான் உந்த கிரடிட் கார்ட் எண்டு ஒரு மட்டையை எல்லாரிட்டையும் குடுத்துட்டு அவங்களை பிச்சு எடுத்து விட்டிடுவாங்கள் இந்த வங்கிக்காரங்கள். பாப்பம் இந்த ஓபாமாவோ? அந்த

மனுசன் வந்து என்னத்தைக் கிழிக்கப் போகுதெண்டு. அது நான் அப்போத சொன்னது போல எந்த நாடு எண்டு இல்லைக் கண்டியளே ! எல்லாருக்கும் ஒரே பேராசை. தனக்குத்தான் எல்லாம் வேணுமெண்டு ஒவ்வொருத்தரும் நினைக்கினம் கண்டியளே !

அதோட எல்லா நாடுகளிலையும் தலைவர்கள் சனத்தை ஏமாத்தியெல்லே போடுகினம். உதைப்பத்தித்தான் தம்பியவை ராத்திரி தண்ணியடிச்சுட்டு ஒரே சத்தம் பாருங்கோ...

உவங்கள் சின்னப் பொடியள் உலக அனுபவம் பத்தாது கண்டியளே ! நாங்கள் ஏதாவது சொல்லப்போனால் உது " பெரிசு " சும்மா அலட்ட வந்திட்டுது எண்டெல்லே நினைக்கிறாங்கள்.

அதுவும் சரிதான் நானும் உயிருக்குப் பயந்து ஓடிவந்தனான் சும்மா வாயை மூடிக்கொண்டு இருந்தா நல்லதுதானே. எனக்கென்ன கண்டியளே ! சாப்பாடு கிடைச்சாச் சரி, "ஓபாமா" வந்தாலென்ன? ஓமெண்டு சொல்லாதவன் வந்தாலென்ன?

அதுதான் எண்ட அப்பு அந்தக் காலாத்தில " ராமர் ஆண்டாலென்ன? ராவணன் ஆண்டலென்ன " எண்டொரு விசயம் சொல்லுறவர்.

எண்ட சிட்டுவேஷனில பேசாம வாயை மூடிக்கொண்டு இருக்கவேண்டியதுதான்... கனக்க அலட்டிப் போட்டடன்..வரட்டே.. அடுத்தமுறை சந்திப்பம்.

(யாவும் கற்பனையே) ஆக்கம்: சக்தி சக்திதாசன்

---

## சொல்லத் துடிக்குது மனசு ... 4 ( தொடர்கதை )



படுக்கையில் புரண்டு கொண்டிருந்த மனீஷுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. கண்களில் மாறி, மாறி கர்வம் பிடித்த சந்திராவின் உருவம் வந்து, வந்து போய்க் கொண்டிருந்தது.

அன்று டின்னர் முடிந்ததும் " சந்திராவை ட்ராப் பண்ண முடியுமா?" என்று ஸ்டீவ் கேட்கவும், " ஓ அதற்கென்ன " என்று தான் பதிலளிக்கவும், சட்டென்று " நான் தனியாகத்தான் வந்தேன் எப்படிப் போவதென்று எனக்குத் தெரியும்? என்று முகத்தில் அறைந்தாற்போல் சந்திரா பதிலளித்ததும் அவனைப் போட்டு பிசைந்து கொண்டிருந்தது. ஆத்திரமும், தன்மானமும் சேர்ந்து கலந்த உணர்ச்சி, உறக்கத்தை ஊரை விட்டே விரட்டிக் கொண்டிருந்தன.

ஒருவாறு அசதி அவனை அயரப்பண்ணியது. அசந்து தூங்கி விட்டான்.

அன்று ஆபீஸில் வேலையே ஓடவில்லை மீட்டிங்கில் உட்கார்ந்திருந்தவனின் காதுகளில் அவனது மனேஜரின் குரல் சந்திராவின் குரலைப் போன்றே ஒலித்தது.

சே ! என்ன இது அந்த கர்வம் பிடித்தவளுக்காக நான் எனது நிம்மதியை இழப்பதா? என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.

தொலைபேசியில் அம்மா அன்று சாயந்தரம் அவனுக்குப் பிடித்த சமையல் செய்திருப்பதாகவும் கட்டாயம் வரும்படியும் ஆளையிட்டாள். வேண்டா வெறுப்பாக ஒத்துக் கொண்டான்.

சாயந்தரம் பப்புக்கு வரும்படி அழைத்த ஸ்டீவிடம் தன்னை வீட்டுக்கு வரும்படி அம்மா அழைத்திருப்பதை வெறுப்புக்கலந்த தொனியுடன் கூறினான்.

கடகடவென்று சிரித்தான் ஸ்டீவ்,

" வை ஸ்டீவ் ? ஏன் சிரிக்குறே? என்னோட விரக்தி புரியல்லையா? " ஆத்திரத்துடன் கேட்டான் மனீஷ்.

" நோ ! நோ ! உன்னை நினைச்சா எனக்கு

அழுகிறதா? சிரிக்குறதா ? என்றே தெரியவில்லை. உனக்கு பிடிக்காத விஷயத்தை பிடிக்கல்ல என்று உன்னோட பேரண்ட்ஸ்க்கு சொல்ல முடியல்லென்னா அப்புறம் என்ன ரிலேஷன்ஷிப் ? " கொஞ்சம் காரமாகவே கேட்டான் ஸ்டீவ்.

" ஸ்டீவ் நீ வளர்ந்த முறை வேறு, நம்மோட முறை வேறு அதைச் சொல்லி உனக்கு புரிய வைக்க முடியாது" அலுத்துக் கொண்டான் மனீஷ்.

" ஏதோ எனக்குப் புரியல்லைப்பா " என்றவாறே வெளியேறினான் ஸ்டீவ்.

சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்து ப்ளேட்டை பார்த்தவாறே, அம்மா சொல்வதற்கெல்லாம் "உம்" கொட்டிக் கொண்டிருந்தான் மனீஷ்.

அவனது பரிதாபகரமான நிலையை ரசித்துக் கொண்டிருந்தாள் அவனது தங்கை. அம்மாவோடு சேர்ந்து எங்கே தானும் ஏதாவது சொன்னால் மனீஷ் கோபித்து விடுவானோ என்று சந்தேகித்து அப்பா மெதுவாக டீ.வி யின் முன்னால் உட்கார்ந்து விட்டார்.

" டேய் மனீஷ், என்னடா பெண் பார்ப்போம் என்றாலும் வேண்டாம் என்கிறாய், நீயாக யாராவது பெண்ணைப் பார்த்திருக்கிறாயா என்று கேட்டாலும் இல்லையென்கிறாய். அதுவும் ஒரே அந்த ஸ்டீவோட சுத்திக் கொண்டேயிருக்கிறாய்........" இழுத்தாள் அம்மா.

"அதுக்கு இப்போ என்னை என்ன செய்யணும் என்கிறீங்க அம்மா? ஸ்டீவ் என்னோட உற்ற நண்பன், அவனோட ஒன்றாகப் போனால் என்ன தவறு? மனீஷின் முகத்தில் கொஞ்சம் கோபம் தெறித்தது

" மனீஷ், ஸ்டீவின் கதைகள் உனக்குத் தெரியும் தானே.... தெரிஞ்சவர்கள் பேசிக்கொள்கிறதை எம்மால் நிறுத்த முடியுமா? அதுதான் நீ ஏதாவது பெண்களின் அறிமுகம் பற்றிச் சொன்னால்....." மீண்டும் அம்மா இழுத்தாள்.

" மம்மி , ஐ ஆம் நாட் எ ஹோமோசெக்ஷுவல், ஸ்டீவ் ஒன்றும் அப்படி இல்லை. ஜஸ்ட் பிகோஸ் ஹீ இஸ் எ நைஸ் ஷாப்...." மீண்டும் கர்ஜித்தான் மனீஷ்.

" சரி மனீஷ் நாம இந்த மாசக் கடைசியில துனீசியா ஹாலிடே போறதுக்கு லீவெல்லாம் எடுத்தாச்சா...? அம்மா மீண்டும் தொண, தொணத்தாள்

"உம்....உம்" என்றவாறே ஜாக்கெட்டை எடுத்து மாட்டினான் மனீஷ்.

காரை ஓட்டிக் கொண்டிருந்த மனீஷின் மனதில் அம்மாவின் வார்த்தைகள் மீண்டும் ஒலித்தன. நான் வாழும் சமுதாயம் அப்படி, புலம் பெயர்ந்தார்களே ஒழிய அவர்களது மனம் பெயரவில்லை அந்த அழுக்காற்றினுள் தான் புதைந்திருக்கிறது.

பாவம் அம்மா என்ன செய்வாள்? அதுதான் உறவினர்கள், நண்பர்கள் அவளைப் போட்டு பிய்த்து விடுவார்களே ! நான் அம்மாவுடன் கொஞ்சம் கடுமையாகத்தான் நடந்து கொண்டேனோ?.... அவனது மனம் கொஞ்சம் இளகியது.

கைக்கடியாரத்தைப் பார்த்தான் அப்போதுதான் மணி ஒன்பதரையைக் காட்டி நின்றது. சமர் மாதமாகையால் இன்னும் இருளவில்லை, காரை அப்படியே தேம்ஸ்நதிக்கரையோரம் ஓட்டினான்.

காரை பார்க் செய்து விட்டு இறங்கி, ஆற்றுக் கரையோரம் நடந்தான். அப்போது தொலைவில் ஒரு உருவம். பெஞ்ச் ஒன்றில் உட்கார்ந்திருந்தது.

அருகே நெருங்க, நெருங்க அது ஒரு பெண்ணுருவம் என்று புலப்பட்டது.

" ஓ இவளா " அவன் மனம் பதைத்துக் கொண்டது. மீண்டும் மனதை ஆத்திர உணர்ச்சி கவ்விக் கொண்டது.

மெதுவாகத் திரும்பி நடக்க முற்படும் போது "உனக்கு பெண்களைக் கண்டால் இத்தனை பயம் என்று தெரியாது" என்றொலித்த சந்திராவின் குரல் அவன் கால்களுக்கு பிரேக் போட்டது.

" சே பயமா? அதெல்லாம் கிடையாது பொதுவாகவே எனக்குக் கர்வமுடையவர்களைக் கண்டால் பிடிக்காது"

என்றவாறே அவளை நோக்கித் திரும்பினான்.

" இத்தனை பெரிய ஊரில் நான் போகும் இடம் தானா உனக்குக் கிடைத்தது? என்று எண்ணுகிறாயா " மீண்டும் சிரித்தாள் சந்திரா.

" என்ன இருந்தாலும் திமிர் உனக்கு அதிகம் தான் " ஏளனத்தோடு சொன்னான் மனீஷ்.

"இருக்காதா? இத்தனை இளைய வயதில் இத்தனை பெரிய பதவி அடைந்து விட்டேனே " மமதையுடன் சந்திரா

" சரி ஏது இவ்வளவு தூரம்?" மனீஷ்.

" ஒரே போரிங் ஆக இருந்தது. ப்ஃளாட் மேட் வேறு ஹாலிடே போய் விட்டாள் அதுதான் சும்மா... ஆத்தோரம் " இழுத்தாள் சந்திரா.

" சரி இவ்வளவு தூரம் வந்து சந்தித்து விட்டோம். வா அந்த பப்புக்கு போய் இரண்டு கிளாஸ் பீர் சாப்பிட்டு விட்டு போகலாம்...." என்றான் தயங்கியபடி கேட்டான் மனீஷ்.

அவனை தீர்க்கமாக ஏறிட்டுப் பார்த்தாள் சந்திரா.

" திஸ் டஸ் நாட் சேஞ்ச் எனிதிங், நீ இப்பவும் ஒரு ஆணாதிக்கம் பிடித்தவன் தான்." என்றவாறே பப்பை நோக்கி நடந்தாள் சந்திரா.

புரியாமல் குழம்பியவாறு அவள் பின்னால் நடந்தான் மனீஷ்.

கையில் பீர் கிளாஸுடன் எதிர், எதிராக உட்கார்ந்தார்கள் மனீஷும், சந்திராவும்.

தனது கருவிழிகளால் அவன் மனதில் உள்ள எதையோ ஆழத் துருவிக் கொண்டிருந்தாள் சந்திரா.

அவளது முகத்தை நோக்கியபடி இருந்தாலும் மனம் மட்டும் எங்கோ, எதையோ எண்ணிக் கொண்டிருக்க சிலையாய் அமர்ந்திருந்தான் மனீஷ்.

அவனது மௌனத்தை ரசித்தவாறே ஒரு அர்த்தம் பொதிந்த புன்னகையை வீசியவாறே, " என்ன ட்ரிங் சாப்பிடலாம் வா என்று அழைத்து விட்டு ஏதோ பேயைக் கண்டவன் போல உட்கார்ந்து விட்டால் ...." அவளது குரலில் தொனித்த ஏளனத்தைப் புரிந்து கொண்டான் மனீஷ்.

" நான் கர்வம் பிடித்தவர்களுடன் பேசுவது குறைவு " என்றான் மனீஷ்.

" அப்படியா? தட்ஸ் குட், நான் கூட ஆணாதிக்கம் பிடித்தவர்களை மதிப்பதில்லை" சந்திரா.

" ஏன் உன் கண்களில் எல்லா ஆண்களுமே அப்படித்தான் தென்படுவார்களா?" மீண்டும் மடக்கி விட்டதாக நினைத்துக் கொண்டு கேட்டான் மனீஷ்.

" உன் மனதில் நீ பெண்களுக்கு கொடுத்திருக்கும் மரியாதையை விட நான் ஆண்கள் மீது கொண்டிருக்கும் அபிப்பிராயம் ஒன்றும் கேவலமானதில்லை "

" சே, உன்னைப்போல ஒரு பெண் என் பெற்றோரின் கண்களில் தட்டுப்பட்டிருந்தால், நான் ஏன் திருமணம் செய்ய மறுக்கிறேன் என்பதை இலகுவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள் " என்றான் மனீஷ் மீண்டும் காரமாக.

" நான்கூடத்தான் உன்னைப் போல ஒரு பிடிவாதக்கார ஆணைக் கண்டிருந்தால் எனக்குக்கூட அந்தச் சிரமம் இருக்காது எனத்தான் எண்ணுகிறேன் " என்றாள்.

" சரி கிளம்புவோம் நமக்குள் இருக்கும் கருத்துப் பேதம் இன்றைக்கோ அல்லது நாளைக்கோ முடிகின்ற விடயமல்ல " என்றவாறு எழுந்த மனீஷைத் தொடர்ந்து சந்திராவும் சென்றாள்.

இருவரது கால்களும் எதிர்த் திசைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவர்களது கார்களை நோக்கி நடந்தன.

ஏன் அவர்கள் மனங்களும் கூடத்தான்.

(தொடரும்) ஆக்கம்: சக்தி சக்திதாசன்

# முத்துக் குளிக்க வாறீயளா !



இதோ அண்ணன் முத்துலிங்கம் அவர்களின் மற்றுமோர் மணியான படைப்பு. வாழ்க்கையின் உண்மை நிலைகளை நகைச்சுவை ததும்பும் பாணியில் திரட்டித்தரும் இவரின் திறமை சொல்லில் அடங்காது. சிலருடைய எழுத்துக்கள் படிக்கத் தொடங்கினால் கீழே வைக்கமுடியாத அளவிற்கு அருமையாக இருக்கும். அப்படியான ஒரு எழுத்தாளரே அண்ணன் முத்துலிங்கம் அவர்கள். அவருடைய " அங்கே இப்ப என்ன நேரம் " என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்ட கட்டிரை ஒன்று இங்கே மீள்பிரசுரிக்கப்படுகிறது.

## ஐந்து பணத்துக்கு குதிரை

என்னைப் பார்த்து ஒரு பெண் கண்ணடித்தாள். இது நடந்தது கனடாவில். ஒரு பலசரக்குக் கடையில் நான் ஒரு உணவுப் பக்கெற்றைத் தூக்கி வைத்து இது பழசா? இதை வாங்கலாமா? என்று விசாரித்தேன். அவள் கீழ்ப்படிவதற்குப் பழக்கப்பட்ட ஒரு விற்பனைப் பெண். ஒரு மயிலின் தலை போல தானாக ஆடுகின்ற ஒரு சிறிய தலை அவளுக்கு. என்னை உற்றுப்பார்த்தாள். என்னிடம் அவவ்க்கு இரக்கம் உண்டாகியிருக்கலாம். உடம்பின் அசகல அங்கங்களையும் ஒடுக்கி, விறைப்பாக வைத்துக் கொண்டு கண்ணை மட்டும் சிமிட்டினாள். கடை முதலாளி பின்னால் நின்றார்.அவள் கொடுத்த சைகையில் நான் பொருளை வாங்கவில்லை. வாரம் $250 சம்பளம் வாங்கும் இந்தப் பெண் செய்த துரோகச்செயலுக்காக வேலையை இழந்து விட்டாள் என்று பின்னால் எனக்குத் தெரியவந்தது.

ஒருமுறை நான் நாயாக்கரா நீர்வீழ்ச்சியைப் பார்க்கப் போனபோதும் இப்படியான் அனுபவம் ஒன்று ஏற்பட்டது. கார் சி.டியில் அப்போது பிரபலமான "ப்ப் போடு" பாடல் போய்க்கொண்டிருந்தது. கனடாவின் தேசியகீதமும் "ஓ கனடா" என்றே ஆரம்பமாகிறது. ஒன்பது வரிகள் கொண்ட இந்தத் தேசியகீதத்தில் ஐந்து தடவைகள் "ஓ கனடா" பிரயோகம் வரும். பல கனேடியர்களுக்கு இப்பாட்டின் வரிகள் பிடிக்கவில்லை. மெட்டும் பிடிக்கவில்லை. இதைத் திருத்தி அமைப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. என் நண்பர் ஒருவர் "ஓ போடு" மெட்டையும், அதன் வரிகளையும் தான் பரிந்துரை செய்யப் போவதாகப் பயமுறுத்துகிறார். யார் கண்டது அவருக்கு வெற்றி கிடைத்தாலும் கிடைக்கும்.

நீந்த நாயாக்கரா பயணத்தில் கடைசியாக வாங்கிய உணவுப் பக்கெற் சிலதை எடுத்துப் போயிருந்தேன். இந்த உணவு வகைகள் யாரோ ஒரு மூதாட்டியரால் இரவிரவாக ஒரு தொடர் மாடிக்கட்டிட சமையலறையில் தயாரிக்கப்பட்டவை. அவை செயற்கை காற்றி அடித்து ஊதிப்போய் பம்த்து அழகாக இருந்தன. உள்ளே இருப்பதை பெரிதாக வேறு காட்டின. ஒரு இடத்தில் " இங்கே கிழிக்கவும் " என்று கறுப்புக் கோடு போட்டிருந்தது. இந்தக் கறுப்புக்கோடுகளை உலகில் வாழும் யாரும் நம்பக்கூடாது. கார் 120 கி.மீ வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. விரல்களினால் எவ்வளவு முயன்றும் அந்தப் பக்கெற்றை அசைக்க முடியவில்லை. பல்லின் உதவியை நாடியும் பிரயோசனமில்லை. யாராவது உள்ளே இருக்கும் உணவை அபகரித்து விடுவார்கள் என்பது போல பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. பதினைந்து நிமிடநேரம் இந்தச் சண்டை தொடர்ந்தது. நான் உணவைச் சாப்பிட விரும்பிய இடத்தில் இருந்து 30 கி.மீ தள்ளி பக்கெற் விட்டுக் கொடுத்தது. அளவுக்கு மீறிய பலத்தைப் பிரயோகித்ததால் பக்கெற் உடைந்து உணவுப்பொருள்கள் காலடியில் சிதறி விழுந்தன.

ஒருசமயம் இப்படியான தொழிலில் ஈடுதூட்டிருந்த என் நண்பர் ஒருவரிடம் இந்தச் சம்பவத்தை விவரித்தேன். இவ்வளவு கடுமையான உழைப்பில் ஒரு பொருளை சந்தைக்குக் கொண்டுவரும்போது கொஞ்சம் வாடிக்கையாளர்களின் வசதியையும் யோசித்திருக்கலாமே என்று சொன்னேன். அவர்"இந்தத் தயாரிப்புக்களில் 50 சதவீதம் உற்பத்திவிலை;மீதி 50 சதவீதம் விளம்பரத்துக்கும், பக்கெற் செலவுக்கும் போய்விடுகிறது. எங்கள் லாபம்

சிறு தொகைதான் " என்றார். நான் சொன்னேன்"தரமான பொருளைப் பயனர் எப்படியும் கண்டுபிடித்து விடுவார். நீங்கள் தரத்தைக் கூட்டுங்கள். சேவையை மேம்படுத்துங்கள். விளம்பரத்தைக் குறையுங்கள். அது விரயம்" அவருக்குப் பிடிக்கவில்லை. உங்களுக்கு மேல்நாட்டு விளம்பர உத்திகள் பற்றிய அறிவு போதாது என்றார். அதற்குப் பிறகு என்னை எங்கே கண்டாலும் எங்கள் இடைவெளியை அவர் அகலப்படுத்தத் தொடங்கி விட்டார்.

உதாரணத்துக்கு ஒன்று சொல்லலாம். ரொறோன்ரோவில் இளைஞர் ஒருவர் புகைப்படக் கம்பெனி ஒன்று ஆரம்பித்தார். 8 * 8 அடி அறையில் ஒரு சிறிய மேசை போட்டு, அதற்கு மேல் பாதிகடித்த ஆப்பிள் படம் போட்ட ஒரு கம்பியூட்டர். ஒரு பச்சைக்கலர் டெலிபோன். விலை உயர்ந்த கமிரா. அவ்வளவுதான். அவரே முதலாளி. விற்பனையாளர், படம்பிடிப்பாளர், பொதுசனத் தொடர்பு அதிகாரி எல்லாம். இவரை ஊக்குவிக்க வேண்டும் என்பது என் கொள்கை. ஒரு படம் பிடிக்கும் விசயமாக ஒருநாள் அவரைத் தொலைபேசியில் அழைத்தேன். யந்திரக்குரல் ஒன்று பேசியது.எங்களுடைய எல்லாப் பிரதிநிதிகளும் அழைப்பில் இருக்கிறார்கள். அவகாசம் கிடைக்கும் முதல்பிரதிநிதி உங்களுடன் தொடர்பு கொள்ளுவார். தயவுசெய்து அழைப்பில் இருங்கள். உங்கள் வாடிக்கை எங்களுக்கு மிகவும் முக்கியம்" என்று திருப்பி, திருப்பிச் சொன்னது. இதைவிட அப்பட்டமான பொய்யோ, பட்டோபமான தோரணையோ உலகத்தைப் புரட்டிப் போட்டாலும் கிடைக்காது. எந்தக் காரணம் கொண்டும் வாடிக்கையாளர் தன் தொடக்க நிலையை கண்டு பிடித்து விடக்கூடாது என்பதிலேஎயே இவ்விளைஞர் குறியாக இருந்தார். வாடிக்கை பிடிப்பது இரண்டாம் பட்சம்தான். நான் பத்து நிமிடங்கள் காத்திருந்த பின்னர் ஒரு மெஷின் வந்து தகவல் விடச்சொன்னது. அந்த இளைஞர் அந்தக்கணமே என்னை மறந்து விட்டார் என்றே நினைக்கிறேன்.

என் வீட்டுக்கு flyers வந்த வண்ணமே இருக்கும். அவற்றை எடுத்து மேலோட்டமாகப் பார்த்து விட்டு குப்பையில் போடுவேன். சமையல் அடுப்புகள், நுண்ணலை அடுப்புகள் உடனுக்குடன் திருத்தித் தரப்படும் என்று ஒரு துண்டு வந்தது.என்னுடைய மின்னடுப்பு இருபாதி கொண்டது. அதில் ஒரு பாதி வேலை செய்வதை நிறுத்தி சில மாதங்கள் கடந்து விட்டன. உடனேயே விளம்பரக்காரரைத் தொலைபேசியில் அழைத்து பீப் என்று சத்தம் வந்த பிறகு தகவலை விட்டேன். பதிலில்லை. இன்னுமொருமுறை கூப்பிட்டேன். அப்போதும் மௌனம். எப்படியோ கடைசியில் ஒருவர் வீட்டுக்கு வந்து சோதனை செய்து, ஒரு உதிரிப்பாகம் மாற்ற வேண்டும் என்று சொல்லி அதைக் கழற்றிப் போனார். அதற்குப் பிறகு அவர் வரவேயில்லை. எத்தனை தகவல் விட்டாலும் பதில் இல்லை. ஆனால் வாரத்துக்கு ஒருமுறை அவருடைய நிறுவனத்திலிருந்து விளம்பரத்துண்டுகள் வருவது மட்டும் நிற்கவில்லை. கையிலிருக்கும் வேலையை முடிக்க முடியாதவர் எதற்காக திரும்பத் திரும்ப விளம்பரம் செய்கிறார். அவரிடமே கேட்டேன். மூச்சு விடுவது உயிரினத்தின் அறிகுறி என்பது போல விளம்பரம் செய்வதும் ஒரு நிறுவனம் உயிரோடு இருக்கிறது என்பதன் அடையாளம் என்கிறார்.

ஓர் உணவகத்தின் உரிமையாளரை எனக்குத் தெரியும். கலை நிகழ்ச்சிகள், விழாக்கள் எது நடந்தாலும் அங்கே உணவு சப்ளை இவர்தான். இதுவரையில் ஒரு புத்தகமும் எழுதி தான் வெளியிடவில்லை என்றார். இது என்னை ஆச்சரியத்தின் உச்சிக்கே தூக்கிச் சென்று, அங்கேயிருந்து சட்டென்று கையை விரித்துக் கீழேபோட்டது. கனடாவில் இப்படி ஒருவரைக் காண்பது அபூர்வம்.

இவர் நாளுக்கு பன்னிரண்டு மணிநேரம் நின்ற நிலையிலேயே வேலை செய்பவர். அவரது வலதுகை மெஷினில் விலைப்பட்டியலைப் பதியும், அதே நேரத்தில் அவரது சொண்டுகளும்

வேகமாக அசைந்து அந்தக் கணக்கைப் போடும். எப்பொழுதும் இவரது அக்கடைவாசலில் " எடுத்துப் போகும் " உணவுப் பார்சலுக்காகச் சனங்கள் வரிசையில் நிற்பார்கள். அப்போது யாராவது வெள்ளைக்காரர் வந்தால் இந்த உரிமையாளர் அவரை லைனுக்கு வெளியே வைத்து கவனித்து முதலில் அனுப்பி விடுவார். இப்படியான வாடிக்கைகளை எப்படியும் நிரந்தரமாக்கி விடவேண்டும் என்பது அவருடைய கொள்கை.

ஒருமுறை ஒரு புது வாடிக்கையாளர் இந்த வரிசையில் வெகுநேரம் நின்றார். அப்போது பார்த்து ஒரு வெள்ளைக்காரி, ஆட்டுத்தோல் முழுஅங்கியைக் கழற்றாமல், விடுமுறையில் வந்த ராசகுமாரி போல் பொன்முடி பிரகாசிக்க உள்ளே நுழைந்தாள். அவள் முகத்தில் சிநேகம் விரும்பும் தன்மை இருந்தது. இந்த முதலாளி எல்லோரையும் உதறிவிட்டு அவளைக் கவனிக்க விரைந்தார். அவள் வரிசையில் நிற்கும் தன் கணவரைச் சுட்டிக்காட்டி அவரைத் தேடி வந்ததாகச் சொன்னாள். கடைக்காரருக்கு முகம் சுருங்கிவிட்டது. ஒரு இலங்கைக்காரர் வெள்ளைக்காரியை மணமுடித்திருப்பது அவருக்குச் சங்கடத்தைக் கொடுத்தது. இந்தச் சம்பவத்துக்குப் பிறகாவது அவர் தன்னுடைய ரூல்ஸை மாற்றி விட்டாரா என்பது இன்றுவரை தெரியவில்லை.

இன்று நான் வீட்டுக்கு வந்து சல்லடைக் கதவைத் திறந்தபோது ஏழு விளம்பரத் துண்டுப்பிரசிரங்கள் அகப்பட்டன. பிரதான கதவைத் திறந்ததும் அவை எழுந்து,எழுந்து பறந்தன.அதிக பணச்செலவில் என் வீடு தேடிவந்த அத்தனை விளம்பரத் தாள்களையும் பார்வையிட்டு விட்டு நான் குப்பையில் போடுவேன். இவர்கள் விளம்பரத்தின் மீது எத்தனை நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அவ்வளவு பயனர்களின் அறியாமையிலும் வைத்திருக்கிறார்கள். ஆனால் நான் ஏமாளி அல்ல. முட்டாளும் இல்லை. என்னுடைய குதிரையின் விலை ஐந்து பணம்தான். அது ஆறு கடக்கவும் பாயும். முக்கியமாக என்னை ஏமாற்ற நினைக்கும் நிறுவனங்களின் முன்னே நிற்காது. தாண்டிப் பாய்ந்து போகும்.

ஆக்கம் : திரு.அ.முத்துலிங்கம் நன்றி : " அங்கே இப்ப என்ன நேரம் "

---

# கொஞ்சம் சிந்திபோமா ?



இறை நம்பிக்கை வாழ்க்கையில் அவசியம்.ஆனால் நான் இறைவனில் நம்பிக்கை கொண்டுள்ளேன் என்று சொல்லிக் கொண்டு செயலற்று நின்று விட்டால் வாழ்க்கையில் வெற்றி கிட்டுமா? இறை நம்பிக்கை வாழ்க்கையில் எந்த அளவிற்கு முக்கியமோ, அந்த அளவிற்கு வாழ்வில் முன்னேற்றத்தை நோக்கிய செயற்பாடும், முன் ஜாக்கிரதையும் அவசியம்.

முல்லா நஸ்ருத்தீன் ஒரு மண்டபத்தினுள் நுழைந்தாராம், நுழையும் போது தனது கால்களில் அணிந்துள்ள பாத அணிகளை கழற்றி ஒரு பையினுள் போட்டுக்கொண்டு அதைக் கையிலே கொண்டு சென்றாராம்.

அப்போது அவரைக் கண்டவார்கள் " பெரியவரே கைகளில் அது என்ன பார்சல்?" என்று கேட்டார்களாம் அதற்கு அவர் " இது ஒரு புத்தகம், இதற்கு முன் ஜாக்கிரதை என்று பெயர்" என்றாராம்.

இந்தச் சிறுகதையை நான் எழுத்தாளர் கீழை சீனா தானா அவர்கள் எழுதிய " மதங்கள் சொல்லும் நற்சிந்தனைகள் " என்னும் நூலில் படித்தேன். இந்தச் சிறிய சம்பவம் கூறுவது எத்தகைய ஒரு பெரிய கருத்து என்பதை நினைக்கும் போது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

நன்றி : " மதங்கள் கூறும் நற்சிந்தனைகள் " எழுதியவர் கீழை சீனா தானா

# அந்தோணி முத்து வின் வண்ண மலர்கள்



தம்பி அந்தோணி முத்துவைப் பற்றி ஏற்கனவே தமிழ்ப்பூங்கா வாசகர்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். இந்த இறைவனின் திருக்குழந்தை காலம் தனக்கிட்ட விலங்கை தன்னை பிணைத்திருக்கும் தடையாகக் கருதாமல் மிகவும் உத்வேகத்தோடு புதிய பரிமாண நோக்கோடு வாழ்வின் சாவல்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்.

இந்த அற்புத மனிதனைச் சுற்றி இறைவன் தன்னலமற்ற சொந்தங்களால் பின்னப்பட்ட பாசவலையை விரித்திருக்கிறான். தனது சிரிய பரப்பளவு கொண்ட உலகத்தினுள் பிரபஞ்சத்தின் ஆட்டத்தையே அளந்து வைத்திருக்கும் இந்த அன்புத்தம்பியின் ஆக்கங்களையே நீங்கள் இங்கே காணப்போகிறீர்கள்.

இதோ இவரது உள்ளத்தை உருக்கும் கவிதை ஒன்று.

எனக்குக்
கால்கள் முளைத்தன....
சக்கரமென்னும்
விரல்களுடன்.....

தெரிந்த பத்து முகங்கள்
தவிர பலப்பல
முகங்களின்
தரிசனம்......
தினமும்......

எனக்கே எனக்கான
வெயிலுடன்
மழையுடன்
காற்றுடன்,
பூக்களுடன்..,
செடி, கொடி... மரங்களுடனும்...
என்னை நானே
அறிமுகப் படுத்திக்
கொண்டேன்.....

இருபத்தைந்து
வருடங்களுக்குப் பிறகு
வண்ணத்துப் பூச்சியுடன்
சினேகம்.......

ஓ.....வாழ்க்கை
இவ்வளவு அழகானதா?

இப்புதிய சக்கரங்கள்
கற்பித்த அற்புதங்களை
அனுபவிக்க வித்திட்ட
அத்தனை
அன்புள்ளங்களையும்

கண்ணீர்ப் பளபளக்கும்...
விழிகளுடன்...
பெருமை பொங்க... நோக்கி...

எவரெஸ்ட் உச்சி மீதேறி நின்று.....
"நான் சந்தோஷமா இருக்கேன்"
எனக்கூவ ஆவல்.........

சொற்களைத் தேடியலைந்து
தோற்றுப் போயின
என் உணர்வுகள்.....

வெறும் நன்றி
சொல்லித் தப்பிக்கப்
போவதில்லை.....

கரம் கூப்பி
சிரம் தாழ்த்தி
வணங்குகிறேன்........

ஒரே நாளில்
பதினோரு வயதுக்
குழந்தையாய் மறுபடி பிறந்தேன்.....

மீண்டும் வாழ்கிறேன்
பதினோரு வயதிலிருந்து ஆரம்பித்து.........

ஆம்...

நான் நடக்கத் தொடங்கியிருக்கிறேன்.

இல்லையில்லை..!

சிறகு விரித்துப் பறக்கத்
துவங்கியிருக்கிறேன்...!

அந்தோணி முத்து

அன்பு வாசக நெஞ்சங்களே ! இந்தக் கவிதைக்குப் பின்னால் உள்ள பின்னனி உங்களுக்குத் தெரிவது அவசியம். ஏனெனில் நம்பிக்கையின் மறுவடிவமான அந்தோணி முத்துவின் உள்ளத்து உணர்ச்சிகளின் துடிப்பு அப்போதுதான் உங்களுக்குப் புரியும்.

ஆமாம் பதினொரு வயதுப் பாலனாக இருக்கும் போதே நடையை இழந்தவன் இந்த அன்புத் தம்பி. நடையை இழந்தானே தவிர அவன் தனது நம்பிக்கையை இழக்கவில்லை.

அந்த நம்பிக்கையின் அடித்தளத்தில் தனது எதிர்கால வாழ்க்கைக்குப் பாதை அமைத்தான். படுக்கையிலிருந்த படியே பல சாதனைகள் புரிந்தான்.

ஒரு கதவை அடைக்கும் இறைவன் மற்றொரு கதவைத் திறப்பதில்லையா ? அதேவகையில் அன்புச் சொந்தங்களின் பாசதீபத்தை இவனுடைய மனமென்னும் ஆலயத்தில் ஆண்டவன் ஏற்றினான்.

தன்னலம் கருதாத பல அன்பு உள்ளங்கள், இந்த நம்பிக்கை நட்சத்திரத்தின் மனதில் எரிந்த நம்பிக்கை என்னும் விளக்கை அணையவிடாது காப்பாற்ற முன்வந்தன.

காலச்சக்கரத்துக்கடியில் நசுக்கப்பட்ட இந்த மலரின் வேர்களில் புதுத்தளிர் தழைத்தது.

நடமாட்டத்தின் மூலம் காணமுடியா உலகினைக் காண கைகளிலே ஒரு மடிக்கணணி கிடைத்தது.

இணைய உலகத்தை மின்னலைகளின் மூலம் வலம் வந்தான் இந்த நம்பிக்கை நாயகன்.

மற்றையோருக்குத் தான் ஒரு பாரமாக இருக்காமல் தானே தன்னைக் காத்துக்கொள்ள வழி பிறக்க வேண்டும் என்று துடித்த தம்பிக்கு அன்புநிறை உள்ளமொன்று கணணி மூலம் ஆற்றக்கூடிய பணி ஒன்று அளித்தது.

எந்த உலகத்தின் அழகினைக் காண முடியாது தவித்தானோ அந்த உலகத்தில் அருகே வலம் வரக்கூடிய வகையில் நண்பர்களின் உதவியினால் மின்சார நாற்காலி ஒன்றும் கிடைத்தது.

மனவானில் பறந்து மானசீகமாக ரசித்த இயற்கையை முதன் முதலாக தனது மின்சார நாற்காலியின் துணையோடு ரசித்தபோது பீறிட்ட எழுந்த உணர்வுகளை அன்னைத் தமிழின் துணையோடு அழகிய கவிதையாக்கித் தந்துள்ளான் தம்பி.

இப்போது மீண்டும் படித்துப் பாருங்கள் ....

நன்றி: அந்தோணியின் வலைப்பூ
தொகுப்பாக்கம் : சக்தி சக்திதாசன்

## தம்பி அந்தோணியின் வலைப்பூக்கள்

- http://mindpower1983.blogspot.com/
- http://mindpower2008.blogspot.com/
- http://anthony.azhagi.com

# ஏதாவது எழுதலாமே !



இந்தப்பகுதி எப்போதுமே என் மனவோட்டத்தின் பிரதிபலிப்பாகவே இருந்து வந்திருக்கிறது. மனதிலே எத்தனையோ எண்ணங்கள் அலைந்தாடிக் கொண்டிருக்கின்றன, அவற்றில் நெஞ்சத்தின் முன்றலில் எவை முன்வந்து நிற்கின்றனவோ அவையே இத்தாளில் முந்தி விழுகின்றன. இன்று இந்தக் காலகட்டத்திலே எம் அனைவருடைய மனங்களையும் அரித்துக் கொண்டிருப்பது உலகப் பொருளாதாரச் சிக்கல். இந்தப் பொருளாதாரச் சிக்கலினால் நாமனைவரும் எவ்விதத்தில் பாதிக்கப்படப் போகிறோம் என்பதுவே பலரின் மனங்களில் ஊசலாடிக் கொண்டிருக்கும் தற்போதைய கவலை.

அது நியாயமான கவலையே ! ஆனால் என் மனதில் நான் சில வருடங்களுக்கு முன்னர் சென்னையின் தெருவோர நடைபாதையில் கண்ட ஒரு குடும்பம் என் கண்முன்னால் தெரிகிறது. இந்தப் உலகத்தின் பொருளாதாரச் சிக்கல்கள் அவர்களுக்கு ஒரு பிரச்சனையாக இருக்குமா? இது ஒரு மிகப்பெரிய கேள்வியாக என் நெஞ்சில் எழுகின்றது.

எப்போதுமே இல்லை என்னும் நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு இப்போதைய நிலை எந்தளவில் பாதிப்பை ஏற்படுத்தப்போகின்றது?

இந்தப் பொருளாதாரச் சிக்கல் தீராமல் இருக்கப்போவதில்லை. ஏனெனில் இது பாதிப்பது உலகின் வலிமை மிக்க நாடுகளையே. அவர்கள் அனைவரும் கூட்டுச் சேர்ந்து இந்தச் சிக்கல்களில் இருந்து தம்மை மீட்டுக் கொள்ளும் நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆனால் இப்பொருளாதாரச் சிக்கல் தீர்ந்தாலும் கூட அந்த "நடைபாதைக் குடும்பம்" அதே நடைபாதையில் தான் இருக்கப் போகிறது.

ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் பஞ்சத்தினால் பரிதாபகரமாக் உயிரிழக்கும் அக்குழந்தைகள், உயிரிழந்து கொண்டுதானிருக்கப் போகின்றன. ஆனால் மேலை நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் எம் வாழ்வின் சிக்கல்கள் வெளுக்கும். பின்புல நாடுகளில் மத்தியதர வாழ்க்கையில் உழலுவோரின் வாழ்வில் கூட மாற்றங்கள் ஏற்படலாம்.

ஆனால் கைவண்டி இழுத்தும் கால்வயிற்றுக் கஞ்சிக்காகப் போராடிக் கொண்டிருப்போர், அதற்காக போராடிக் கொண்டிருக்கத்தான் போகிறார்கள். உலகப் பொருளாத்ராச் சிக்கலோ அன்றி அச்சிக்கலின் தீர்வுகளோ இம்மனிதர்களின் வாழ்வு நிலையை மாற்றப் போவதில்லை என்ற எண்ணம் நெஞ்சில் கொஞ்சம் கனக்கத்தான் செய்கிறது.

இதற்காக நான் யாரையும் குறை கூறவோ அன்றி எந்த நாட்டைக் குறை கூறவோ முற்படவில்லை. பொருளாதாரச் சிக்கல் ஏற்படும் போது எமது செலவுகளை இறுக்கி வாழ்ப்பழகிக் கொள்ளும் நாம், அது தீர்ந்த பின் அதே இறுக்கத்துடன் வாழ்ந்து இந்த நடைபாதை மனிதர்களின் வாழ்விலோ அன்றி அவர்களையொத்த நீங்கள் அறிந்த வேறு மனிதர்களின் வாழ்விலோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்த எம்மில் எத்தனை பேர் சிந்தித்துள்ளோம்? இது என்னையும் சேர்த்துத்தான்.

ஆக்கம் : சக்தி சக்திதாசன்

# வைரமுத்துவின் வார்ப்புக்களோடு



கவிப்பேரரசர் வைரமுத்து அவர்களின் படைப்புக்கள் தனித்தன்மை வாய்ந்தவை. அவரது கவிதைகளில் யதார்த்தம் இருக்கும், கற்பனை இருக்கும், கவிநயம் இருக்கும், தமிழ்ச்சுவை இருக்கும், எளிமை இருக்கும்.
ஆழ்ந்த கருத்துக்களை சிந்தனையைத் தூண்டும் வகையில் அள்ளித்தருவதில் அவர் வல்லவர். அவரது கட்டுரைகள் கவிநயத்துடன், தமிழின்பத்தை அள்ளித்தருபவையாக இருக்கும். தமிழன்னையின் தனிப்பெருந் தலைமகன்களில் முன்னனியில் நிற்பவர் இவர். எதையும் மனந்திறந்து வெளிப்படையாகக் கூழ்ம் இவரின் கருத்துக்கள் போற்றத்தக்கவை. இவரது படைப்புக்களை காலகாலமாக சீர்தூக்கிப் பார்ப்பது தமிழ்ப்பூங்காவில் வழமை.

இதோ கவிப்பேரரசின் கவிதை ஒன்று

## மௌனம் பேசுகிறது

கழுத்துக்கு மாலை போதும்
கைதட்டல் போதும்; எந்தன்
எழுத்துக்கள் உமக்(கு) இல்லை
இன்னொரு தலை முறைக்கு
அழுத்தமாய்ச் சிந்திக் கும்என்
அர்த்தத்தின் ஆழம் காணீர்
விழுதென்று நினைத்தேன் உம்மை
விழலென்று கண்டு கொண்டேன்

கடமையை மழுந்து விட்ட
கனவுகள் பிடிக்கவில்லை
அடிக்கடி உயிரைக் கிள்ளும்
அவசரம் பிடிக்க வில்லை
குடங்குட மாகப் பொய்யில்
குளிப்பதில் இஷ்ட மில்லை
சடங்குகள் பெரிய தொல்லை
சப்தங்கள் பிடிக்க வில்லை

நதிக்கரை ஓரம் பார்த்து
நாணலால் கூரை வேய்ந்து
புதுப்புதுத் தென்றல் வந்து
புகுந்திட வாசல் வைத்து

பண்களைப் பாடிச் செல்லும்
பறவைகள் சிநேகம்; ஆற்றுத்
தண்ணீரில் கரம்பி ரிக்கும்
சங்கீதம் சிலிர்க்க வைக்கும்
வண்ணங்கள் வேண்டாம்-போக
வாழ்க்கையும் வேண்டாம்; சின்னக்
கிண்னத்தில் எனக்குக் கொஞ்சம்
கீரையும் சோறும் போதும்.

அன்பர்கள் வரலாம்; என்னை
அறிந்தவர் வரலாம்; சிந்தும்
கண்ணீரைப் பிளந்து பார்க்கும்
கவிஞர்கள் வரலாம்; வாழ்வை
மன்னிக்கத் தெரிந்து கொண்டு
மௌனத்தைப் பேசிக் கொண்டு
விண்மீனை எண்ணிக் கொண்டு
விடிகாலை வரைஇ ருப்போம்

நன்றி: " ரத்த தானம்"

****************************************

அன்பு வாசகநெஞ்சங்களே ! இந்த அழகான கவிதையை நன்கு ரசித்திருப்பீர்கள்.

தன்னுடைய மனூப்பாங்கை, தான் ரசிக்கும் இளமையின் எழிலை, தனது கவிதை வரிகளில் தனக்கிருக்கும் நம்பிக்கையை மிகவும் தெளிவாக அன்னைத் தமிழின் அழகுற அற்புதமாய்ச் சொல்லியிருக்கிறார் அன்பர் வைரமுத்து அவர்கள்.

இவரது படைப்புக்கள் பலவற்றை தொடர்ந்தும் தமிழ்ப்பூங்காவில் ரசித்து மகிழ்வோம்.

தொகுப்பு : சக்தி சக்திதாசன்

# ஒரு இந்துவின் பார்வை



சமுதாயத்திலே, சமூகத்திலே நடக்கும் நிகழ்வுகளை நாம் மனிதர் என்னும் நிலையிலிருந்து பார்க்க வேண்டிய தேவையிருந்தாலும். பல சமயங்களிலே எமது வளர்ப்பு முறையின் தன்மை மதத்தின் அடிப்படியில் அமைந்திருப்பதால் அவைகளை மதம் என்னும் கண்ணாடிக்கூடாகவே பார்க்க வேண்டி வந்து விடுகிறது. ஆனால் அப்படியாகப் பார்க்கும் பார்வைகளில் கூட வித்தியாசங்கள் எதுவும் இருக்கக்கூடாது என்னும் உயரிய நோக்கத்தின் அடிப்படையிலேயே இப்பகுதி இந்தத் தலைப்பைப் பெற்றது.

நடந்து முடிந்த அமேரிக்கப் பொதுத் தேர்தலிலே உயர்ந்து நின்ற பராக் ஓபாமாவின் உருவம் என் மனதில் தோன்றுகிறது. அவரின் பேச்சுக்கு இருந்த வல்லமையை நினைவு கூறுகிறேன். "மாற்றம்" ஆம் அது எம்மால் முடியும் என்ற வார்த்தைகள் அவர் வாயிலிருந்து உதிரும் போது,அங்கே குழுமியிருந்த அரது ஆதரவாளர்களின் வாயிலிருந்து உரக்க அதே வார்த்தைகள் திரும்ப ஒலித்தன.

அவர் தனது முன்னுதாரணிகளாக எடுத்துக் கொண்ட "மாட்டின் லூதர் கிங்", " ஆபிரகாம் லிங்கன்" ஆகியோர்கள் கூட தமது ஆயுதமாக தமது பேச்சு வல்லமையையே கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களது பேச்சு, அந்தப் பேச்சின் துணையோடு மக்களை ஓர் சமுதாயப் புரட்சிக்கு அணிவகுக்கும் வகையில் அமைந்திருந்தது.

அதி சிறந்த மத வழிகாட்டிகள் கடவுள் பக்தி மட்டுமே நிறைந்தவர்களாகவோ அன்றி போதகர்களாகவோ மட்டும் இருக்கவில்லை. தூரதரிசனமிக்க பார்வையுடைவர்களாக இருந்தார்கள்.உதாரணமாக புத்தரை எடுத்துக் கொண்டால் தெளிவற்ற வாழ்க்கையை, ஒரு நிலையறியா வாழ்க்கையை ஒரு இலக்கற்று ராட்டினத்தில் சுற்றிக்கொண்டிருப்பதற்கும், நீச்சல் தெரியாமல் ஆற்றின் நடுவே தத்தளித்துக் கொண்டிருப்பதற்கும் சமமென விளக்கியுள்ளார்.

அதேபோல மக்களின் மகிழ்ச்சியை ஒரு தாமரைக்கு ஒப்பாக்கியுள்ளார். மகிழ்ச்சியின் உச்சம் அத்தாமரை முகிழ்த்து பூவாக விரிந்திருக்கும் நிலைக்கு ஒப்பானது என்று புத்தர் கூறுகிறார். இது கவித்துவம் நிறைந்த அருமையான விளக்கமாகும். இதே போல பல மத உணர்வாளர்களும் பற்பல விளக்கங்களைக் கொடுத்துள்ளார்கள். இத்தகைய விளக்கங்கள் மக்களின் அறிவை அடைவது மட்டுமில்லாமல் அவற்றில் புதைந்திருக்கும் அழகிய விளக்கங்களினால் மக்களின் இதயங்களிலும் பதிந்து உணர்ச்சியலைகளை எம்பி விடுகின்றன.

பேச்சுவன்மை, மதபோதனை இரண்டிலுமே உள்ள இடர்பாடு, இவைகளின் அதிஉயர் மொழிவன்மை மக்களின் சிந்திக்கும் தன்மையை இழக்கப் பண்ணி விடுகிறது. மொழி அழகின் அடிப்படியில் விளையும் பேச்சுக்களால், சாதாரண பேச்சுக்களால் செல்ல முடியாத அளவிற்கு எதிர்பார்ப்புக்கள் சென்று விடுகின்றன.

டூம்பேச்சுத்திறமையால் கிடைக்கும் அதிகாரம் மதங்களிலும் சரி, அரசியலிலும் சரி எப்படி உபயோகிக்கப்படுகிறது என்பதிலும், எத்தகைய தீர்வுகளுக்கு இவை வழிகாட்டுகின்றன என்பதிலுமே இம்மொழிவன்மையின் பயூன் கிடைக்கிறது . கேட்போரை பயமுறுத்துகிறதா? அன்றி ஊக்குவிக்கிறதா ? இல்லை குழப்புகிறதா? அன்றி தெளிவுபடுத்துகிறதா ? இல்லை அடிமைப்படுத்துகிறதா? அன்றி விடுதலை அளிக்கின்றதா ?

ஆக்கம் : சக்தி சக்திதாசன்

# சிறப்புக் கட்டுரை ........ என்.சுரேஷ்

## எல்லோருக்கும் தந்தை இறைவன்



மேல்நாட்டு கலாச்சாரங்களுக்கு அடிமையாகிக் கொண்டே போகும் நமது சமுதாயத்தில் ஒவ்வொரு முக்கிய உறவின் பெயரிலும் வருடத்தில் ஓர் நாள் என்று கொண்டாடும் பழக்கம் கடந்த பத்து-பதினைந்து வருடங்களாக நமது நாட்டிலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

"காதலர் தினம்" எனத் தொடங்கி பெற்றோர்களுக்கும் வருடத்தில் ஒரு நாளென "அன்னையர் தினம்", "தந்தையர் தினம்" என்று கொண்டாடி வருகிறார்கள். இந்த கொண்டாட்டங்களின் மீது சமுதாய சீர்திருத்த நல்லோர்களுக்கு எதிர்ப்பிருந்தாலும் அவர்கள் இதைப் பற்றி ஒரு கருத்தும் சொல்லாமலிருக்க காரணம் என்னவென்றால் வருடத்தில் ஒரு நாளாவது தாய்-தந்தையருக்கு அனபைத் தெரிவித்து இந்த காலத்து பிள்ளைகளில் சிலர் மகிழவைப்பதை ஏன் தடுக்க வேண்டும் என்ற நல்லதோர் சிந்தனைக்கு தள்ளப்பட்டதினால் தான்.

ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை "தந்தையர் தினம்" கொண்டாட 1924-இல் அமெரிக்க அதிபர் கால்லின் கூலிட்ஜ் தனது ஆதரவை தெரிவிக்க 1966-இல் அதிபர் லிண்டன் ஜான்ஸன் அதை அதிகாரபூர்வமாக அறிவித்தார். ஆயினும் அவ்வருடத்திற்கு மட்டுமே இருந்தது. பின்னர் ஏப்ரில் 24, 1972-இல் அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்ஸன், "தந்தையர் தினம்" ஒவ்வொரு வருடமும் நினைவுகூரத் தக்கதாக அறிவித்தார்.
தந்தையர் தினத்தன்று தந்தையார் உயிருடன் இருப்பின் சிவப்பு நிற ரோஜாவும், தந்தையர் மறைந்துவிட்டால் வெள்ளை நிற ரோஜாவும் அணிவார்கள். தந்தையர் தின உணவை தந்தையே சமைத்து பரிமாறுவது இத்தினத்தில் மற்றுமோர் சிறப்பாகும்.

அனாதை இல்லத்துக் குழந்தைகள் எந்த நிற ரோஜாவை அணிய வேண்டும்?

தந்தை யாரென்றே தெரியாமல், அவரின் அன்பை உணர முடியாமல், தாயின் பாச ஸ்பரிசமென்றால் என்னவென்று கேட்கும் அனாதை இல்லத்துக் குழந்தைகளுக்கு இந்த "தந்தையர் தினம்" எவ்வளவு மனவலியை தரும் என்று யோசித்தால் யாருக்கும் மனமுருகும்; கண்ணீர் முந்தி விடும்.

இன்று உலகமெங்கும் எத்தனை கோடி அனாதைக் குழந்தைகள்!

இவர்களைக் காண வரும் பொதுமக்களில் எத்தனை பேர் உண்மைத் தாய்ப் பாசத்தோடும் தந்தைப் பாசத்தோடும் வருகிறார்கள்?

தங்களின் குடும்பத்தில் யாருக்காவது பிறந்த நாளென்றால், அந்த நாளன்று புண்ணியம் வேண்டுமென்ற சுயநலத்தின் எதிர்பார்ப்போடு என்று பிறந்தோம் யாருக்கு பிறந்தோம் என்ற உண்மை கூடத் தெரியாத அனாதைக் குழந்தைகளுக்கு உணவுப் பொட்டலங்களையோ, இனிப்புப் பொட்டலங்களையோ செயற்கைப் புன்னகையோடு வீசியெறிந்து அல்லது அதற்கான பணத்தைக் கொடுத்து ரசீதை வாங்கி, கண்டிப்பாய் ரசீது வாங்கி ( வருமான வரி விலக்கு பயன்பெற!) வீடு திரும்புவோர் பலர்!

ஆனால் அந்தக் குழந்தைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் மனமுள்ளவர்கள் எத்தனை பேர்?

அனாதை இல்லத்திற்கு வருகின்றவர்களைக் காணும்போது "இன்றாவது தனக்கு ஒரு தாயும் தந்தையும் குடும்பமும் கிடைக்காதா" என்ற எதிர்பார்ப்பையும் ஏக்கங்களையும் ஒவ்வொரு அனாதைக் குழந்தையுடைய கண்களிலும் காணலாம். அனால் அந்த எதிர்பர்ப்புகளுக்கு பரிசாக அதிக வேளைகளும் இவர்களுக்கு கிடைப்பது விலை குறைந்த உணவுப் பொட்டலங்களும், இனிப்புப் பொட்டலங்களும், ஆங்காங்கே கிழிந்த பழைய ஆடைகளும் தான்.

அனாதை இல்லத்துக் குழந்தைகளுக்கு அதிகமும் தேவை அன்பும் ஆதரவும் நிறைந்த மனிதர்களின் நேசம் மட்டும் தான்.

அனாதை இல்லத்தார் தங்களால் முடிந்த உணவும், ஆடையும், கல்வியும் அந்த குழைந்தகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். ஆனாதை இல்லங்களுக்காக தங்களையே அர்ப்பணம் செய்து வேலை செய்து வரும் சிலருக்கு அங்கிருக்கும் வேலைகளை செய்யவே நேரமில்லாத ஒரு நிலை. அதனால் பொதுமக்கள் இந்த பிஞ்சுக் குழந்தைகளைக் காணும்போது அவர்களை அள்ளியெடுத்து முத்தமிட்டு, எவ்வளவு பாசம் கொடுக்க முடியுமோ அவ்வளவு பாசம் கொடுத்து மகிழ்விக்க வேண்டும். இதைத் தான் அந்த இல்லத்துக் குழந்தைகளின் மனங்கள் எதிர்பார்க்கின்றன.

பிள்ளைகள் இல்லாதவர்கள் குழந்தைகளை தத்தெடுக்கிறார்கள். ஆனால் பிள்ளைகள் இருந்தும் செல்வச் செழிப்பில் மகிழ்ந்து வாழும் தம்பதியர்கள் அனாதை இல்லத்திலிருந்து குழந்தைகளை தத்தெடுத்து அந்தக் குழந்தைகளையும் அன்புடன் நேசிக்கும் மனம் உலகமெங்கும் மிகவும் குறைவாகவே உள்ளது.

பொதுமக்கள் அனாதைப் பிள்ளைகளை அதிகமாக நேசிப்பது குறைவு என்பதை விட, எந்த குழந்தையும் தான் ஒரு அனாதையாக விரும்புவதில்லை, என்ற உண்மையை அறியாமல் இருப்பதே மிகவும் வருத்தப்பட வேண்டிய உண்மை!

அப்பாவும் அம்மாவும் வேலைக்குப் போகும்போதே அனாதைகள் போலப் பிள்ளைகள் இருக்கிறார்களே என்று கவலை சங்கீதம் இசைக்கும் இந்த தன்னல சமுதாயம், பெற்றோர்கள் யாரென்றே தெரியாமல் கவலையில் வாடும் இந்த மழலைச் செல்வங்களின் நிலையைப் பற்றி அதிகமாய் ஏனோ யோசிப்பதே இல்லை.

நான், எனது குடும்பம், எனது பிள்ளைகள் எனது வேலை, எனது மகிழ்ச்சி இவைகளைத் தாண்டி, மனிதன், தனது நேசத்தின் வட்டத்தை பெரிதாக்க முயற்சி எடுப்பதே இல்லை என்பது நிதர்சனமான உண்மை.

தங்களுக்கு யாருமில்லையே என்று கவலையில் வாழும் அனாதைக் குழந்தைகளோடு பொதுமக்கள் அன்பான நேரத்தை செலவிட்டால், இன்னொரு மனிதன் உயிரோடு இருக்கும் வரை யாரும் அனாதையல்ல என்ற உண்மை, உண்மையாகும்.

அனாதை இல்லத்தில் வாழும் குழந்தைகளுக்கு அன்பில் தான் வறுமை உள்ளது. அதனால் அந்த வறுமையைப் போக்க நல்வழியை எல்லோரும் யோசித்துச் செயல் படுத்தினால் அந்த பிஞ்சு மனங்களில் புத்துணர்வின் ரோஜாத்தோட்டம் தழைத்து வளர்ந்திடும்

ஆக்கம் : என்.சுரேஷ்



# இலக்கியச்சோலை

எழுத்துக்கள் என்பது ஒவ்வொருவருடைய மன அழுத்தங்கள், மன உளச்சல்கள் ஆகியற்றிலிருந்து அவர்களுக்கு கிடைக்கும் விடுதலையாகும்.

அந்த எழுத்துக்கள் இலக்கியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அனைத்து மரபுகளையும் கடைப்பிடித்துத்தான் இருக்க வேண்டும் என்று ஒரு நியதி உருவாக்கப்படுமானால் எதிர்காலச் சந்ததிகளில் எழுத்தாளர்களைக் குறிப்பாக கவிஞர்களைக் காண்பது அரிதாகி விடும்.

அதற்காக ஏனோ தானோ வென்று எழுதவேண்டும் என்பதை நான் வலியுறுத்தவில்லை. ஆனால் எழுத்தாளர்கள் மத்தியில் அனைவருக்கும் ஒரு சமதளம் அமைக்கப்பவேண்டும்.

இது ஓரளவு இணையங்களில் சாத்தியமாகிறது என்றே சொல்லவேண்டும். ஆனால் பெயர் பெற்ற சஞ்சிகைகளின் கதவுகள் இன்னும் பல புதுமுக எழுத்தாளர்களுக்கு அடைக்கப்பட்டே இருப்பது ஒரு வம்த்தப்படக்கூடிய விடயம்.

" தம்பி உன் மனதில் உண்மை இருந்தால் எழுதுகோலை எடு, எழுது " என்றார் மகாகவி பாரதியார்.

எழுத்துக்களின் வடிவம், எழுத்துக்களின் அமைப்பு, கவிதைகளின் ஆக்கம், கவிதைகளின் கரு ஒருவருக்கொருவர் மாறுபட்டிருக்கும் என்பதுவே யதார்த்தம். அப்படி இருப்பதுவே மக்களின் ரசனைக்கும் உகந்தது.

இலக்கியம் என்பது காலத்துக்குக் காலம் கொஞ்சம் மாறுபடுகிறது. காலத்தின் ஓட்டத்தை, அது கடந்து வந்த பாதையை உள்வாங்கிக் கொள்கிறது.

இதன் அடிப்படையில் ஒவ்வொருவருடைய எண்ண ஓட்டங்களிலும் மாறுதல்கள், மாறுபாடுகள் ஏற்படுவது சகஜம், இத்தகைய மாறுதல்களை அவை தமிழ் இலக்கியத்துக்குப் புறம்பானவை என ஒதுக்கி வைக்க முற்பட்டால் ஒரு சந்ததியின் வாழ்க்கை முறைகளின் பதிவுகள் தொலைந்து போய்விடும்.

உதாரணமாக சங்ககாலக் காதலுக்கும், தற்போதைய காதலுக்கும் உள்ள காலைடைவெளி கணிக்க முடியாதது. எனவே எழுதப்படும் காதல் கவிதைகளும் தற்போதைய வாழ்க்கைமுறைகளை ஒட்டியதாக இருப்பதே யதார்த்தம். சங்க கால காடஹ்றகவிதைகளை ரசிக்கும் இளைஞன் கற்பனையில் வேண்டுமானல் அப்படியான ஒரு காதலை ரசித்துக் கவி புனையலாம்.

ஆனால் அவனது நிகழ்கால உணர்வுகளைப் பதிவு செய்ய முற்படும்போது அது புதுக்கவிதைப் பாணி பெற்று விடுவது தவிர்க்க முடியாதது.

உணர்வுத்துளிகளின் சரமே கவிதை. அவையின் வடிவம் மாறினாலும் சாரம் மாறாது. மொழியின் வனப்பு மாறாது. இலக்கியத்துக்குத் தாழ்பாள் போட்டு புதுமையை வெளியே விட்டு விடாமல் அணைத்துக் கொள்வோம்

ஆக்கம் : சக்தி சக்திதாசன்

# இந்த இதழில் மலர்ந்தவர்



தன் வாழ்க்கையில் இறுதிவரை ஒழுக்கசீலராக வாழ்ந்த ஒரு உன்னத குணச்சித்திர நடிகரைத் தமிழ்த் திரையுலகம் இழந்து விட்டது.

ஆம் தமிழகத்தில் தனக்கென அழிக்கமுடியாத இரு நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் என்று பெயர் நினைவுக்கு வந்ததும் மனதில் முந்திக் கொண்டு வந்து நிற்கும் பெயர்களில் திரு.எம்.என்.நம்பியார் அவர்களின் பெயர் முன்னனியில் இருக்கிறது.

1919ம் ஆண்டு கேரளாவில் உள்ள கன்னூரில் பிறந்தார் நம்பியார். ஊட்டியில் வசித்த தனது சகோதரியுடன் சிறுவயது முதலே வாழ்ந்தார். நடிப்பிலே நாட்டம் கொண்டிருந்த இவர் தனது 13வது வயதிலே நவாப் ராஜமாணிக்கம் நாசக சபாவில் இணைந்து கொண்டார்.

இவரது முதலாவது திரைப்படம் 1935இல் எடுக்கப்பட்ட " பக்த ராமதாஸ்" ஆகும். நீது இந்தியிலும், தமிழிலும் தயாரிக்கப்பட்ட படமாகும்.

ஆரம்பத்தில் கதாநாயகனாக தனது திரையுலக வாழ்க்கையை ஆரம்பித்த இவர் பின்னர் வில்லன் பாத்திரங்களிலேயே கொடி கட்டிப் பறந்தார்.

புரட்சி நடிகர் அமரர் எம்.ஜி.ஆர் அவர்களின் படங்கள் பெம்ம்பான்மையானவற்றில் வில்லனாக நடித்து எம்.ஜி.ஆரின் ஓங்கிய புகழுக்குத் தாமும் ஒரு காரணியாக விளங்கினார்.

மந்திரிகுமாரி, ஆயிரத்தில் ஒருரூன், வேலைக்காரி, தில்லானா மோகனாம்பாள், மிஸ்ஸியம்மா, நெஞ்சம் மறப்பதில்லை போன்ற திரைப்படங்களில் மின்னிய இவரது நடிப்பாற்றல் இவரை தமிழ்த்திரையுலகில் ஐந்து சகாப்தங்களுக்கு மேலாக ஒளிவீசப் பண்ணியது

ஆயிரம் திரைப்படங்களுக்கு மேலாக நடித்த இவர் தமிழ் தவிர இந்தி, தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் என் பன்மொழித் திரைப்படங்களிலும் தோன்றி நடித்துள்ளார்.

தமிழ்த்திரையுலகில் தனக்கென ஒரு நிலையான பெயர்பெற்ற இவர் பாலையாவின் காலம் தொட்டு இன்றைய பாரதிராஜாவின் மகன் மனோஜின் திரைப்படம் மட்டும் நடித்துள்ளார்.

திரையுலகில் ஆழப்பதித்த தன் முத்திரையை நம்பியார் நாடக மன்றம் என்னும் நாடகக் குழுவை ஆரம்பித்து நாடக உலகிலும் பதிய வைத்தார்.

இறுதிவரை ஆழ்ந்த சபரிமலைப் பக்தராக விளங்கிய இவர் இறுதிவரை புலால் உண்ணாமல் ஆழ்ந்த பக்தராக விளங்கினார். 65 வருடங்களாக சபரிமலைக்குச் சென்று வரும் இவரை இவ்வருடம் நவம்பர் மாதம் 19ம் திகதி ஐயப்பன் தன்னோடு அழைத்துக் கொண்டார்.

இவரது குடும்பத்தினரோடு இணைந்து நாமும் துயரத்தில் பங்கு கொள்வோம்.

ஆக்கம் : சக்தி சக்திதாசன்

# துருவநட்சத்திரம்



## நிஜத்தின் வலி



நிஜத்தின் வலியை உணராமல்
நிதமும் தன்னை அறியாமல் வீணே
நிழலின் வேஷத்தில் நானிங்கே
நனைந்த பொழுதுகள் தானிங்கே !

தனக்குள் புதைந்த உண்மைகளை
தானாய் உணர்ந்த வேளைகளில்
நினைக்க மழுந்த காலங்களின்
நிஜத்தில் புலர்ந்த நேற்றைய காலைகள்

மனௌதுள் வாழும் மானுட உணர்வுகள்
மழுத்துப் போயின மாந்தரின் நீசத்தால்
மிதக்கும் எண்ணங்கள் மீதமாய் காட்டும்
மேகக் கூட்டத்தின் கலைந்த ஓவியம்

உருவ்ம் உலகத்தில் தவழ்ந்த ஞாபகம்
உருண்ட வேகத்தில் உலர்ந்தே போயின
உள்ளம் முழுவதும் ஏனோ வெள்ளமாய்
உரசுகின்றதும் சிதைந்த சொந்தங்கள்

ரத்தத்தின் ஓட்டத்தின் உச்சத்தில் ஆட்டம்
சித்தத்தின் தெளிவினில் ஏனிந்த வாட்டம்
பித்தத்தில் தானந்த தோழமை நாட்டம்
மொத்தத்தில் நானோரு பூஜ்ஜிய வட்டம்

கனவினில் தெரிந்ததோ பச்சைத் தோட்டம்
நினைவினில் பார்க்கையில் வாழ்க்கையே ஓட்டம்
மனதினில் தெரியும் உண்மையின் நீட்டம்
விலகிடும் முதிர்வினில் நாடகக் கூட்டம்

சக்தி சக்திதாசன்



# அறிவியல் பூங்கா

## விடுதலை இந்தியாவில் விஞ்ஞானத் தமிழ் வளர்ச்சி ( தொடர்ச்சி )



இந்தியா மற்ற கிரேக்க, எகிப்து, ஐரோப்பிய நாடுகள் போல் ஜோதிடக் கணிதத்திலும் நுணுக்கமான தேர்ச்சி அடைந்திருந்தது. ஆனால் முகலாயர் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தி ஆட்கொண்ட பிறகு, கணித, விஞ்ஞான வளர்ச்சிகள் முற்றிலும் முடங்கித் தடைபட்டு, ஐரோப்பாவை ஒப்பு நோக்கினால், இந்தியா ஐநூறு ஆண்டுகள் பின்தங்கிப் போனது!.

### அன்னியரின் ஆதிக்கத்தில் அடிமைப் பட்ட இந்திய மொழிகள்

ஏசுக் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னும் பின்னும் அரிஸ்டாடில் (384-322 BC), டாலமி (367-283) போன்ற கிரேக்க ஞானிகளின் வேதாந்த விஞ்ஞானக் கருத்துகள் தலை ஓங்கி, ரோமாபுரி போப்பாண்டவர் ஆணையின் கீழ் ஐரோப்பிய நாடுகளின் கலாச்சாரம், நாகரீகம் விருத்தி யடைந்தது. அரிஸ்டாட்டில் இந்தியாவுக்குப் பயணம் செய்ய வரைந்து கொடுத்த வழியைப் பின்பற்றி, முதன் முதலில் படையெடுத்து இந்திய மண்ணில் கால்வைத்த கிரேக்க மன்னன், மகா வீர அலெக்ஸாண்டர் (356-323 BC). அடுத்து அன்னியப் பயணி மார்கோ போலோ [Marco Polo (1288-1293)] ஆண்டுகளில், தென்னிந்தியாவுக்கு விஜயம் செய்தார். 15 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானப் புரட்சியும் அதைத் தொடர்ந்து தொழிற் புரட்சியும் ஐரோப்பாவில் ஏற்பட்டு இணையாக ஐரோப்பிய மொழிகளும் மலர்ச்சி யடைந்தன.

துருக்கியின் தலைநகர் கான்ஸ்டான்டிநோபிளின் [Constantinople, Turkey] தரைவழிப் பாதை மூடப்பட்ட பின்பு, ஐரோப்பிய வர்த்தகர்கள் இந்தியாவுக்கு வர முடியாது போகவே, மகாதீரக் கப்பல் மாலுமிகள் புதிய கடல் மார்க்கங்களில் இந்தியாவுக்கு பாதை கண்டுபிடிக்கக் கிளம்பினர். கிரிஸ்டபர் கொலம்பஸ் (1451-1506) இந்தியாவுக்குப் புதுக் கப்பல் மார்க்கம் தேடி, இறுதியில் புதிய அமெரிக்க நாடுகளுக்குக் கடல்பாதை அமைத்தார். அவரைப் பின்பற்றி ஃபெர்டினென்டு மாஜெல்லன் (1480-1521) உலகை முதன் முதல் ஒருமுறை சுற்றி வந்து, பூமி தட்டையானது அன்று, அது ஒரு பொரி உருண்டை என்று நிரூபித்துக் காட்டினார். அடுத்து வாஸ்கோட காமா [Vasco da Gama (1460-1524)] இந்தியாவிக்குப் புதிய கப்பல் மார்க்கத்தைக் கண்டு பிடித்து 1498 இல் இந்தியாவுடன் வர்த்தகம் நிலைநாட்டப் பட்டது. இவ்வாறு ஐரோப்பாவிலிருந்து அன்னிய தேசத்தவர் [அலெக்ஸாண்டர், மார்க்கப் போலோ, வாஸ்கோட காமா] கிரேக்கர், ரோமானியர், போர்ச்சுகீஸியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் பாரதத்தில் காலூன்றிய பின், இந்தியக் கலாசாரம், நாகரீகம், கல்வி அறிவு, மொழிகள் யாவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டன!

1192 ஆண்டில் முகமது கோரி ராஜபுத்திர்களைச் சரித்திரப் புகழ் பெற்ற குருச்சேத்திராவில் தோற்கடித்து, அடுத்து 14 வருடங்கள் கழித்து வடநாட்டில் சுல்தான்களின் ஆட்சி ஆரம்பமானது. 1206 முதல் 1526 வரை 27 துருக்கியின் சுல்தான்கள் டெல்லி ஆசனத்தில்

ஆட்சி செய்தனர்! 1526 இல் பாபர் கடேசி சுல்தானைப் பானிபட் என்னும் இடத்தில் தோற்கடித்து, முகலாய சாம்ராஜியத்தை டெல்லியில் நிலைநாட்டினார்! முகலாயர் ஆட்சியில் அவரது உருது மொழி உன்னத நிலை அடைந்து, ஓரளவு வான சாஸ்திரம் உயர்நிலை அடைந்தது. பதினேழாம் நூற்றாண்டில் பிரிட்டன் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டாது இருந்திருந்தால், இந்தியா ஒரு முஸ்லீம் நாடாக ஈரான், ஈராக், அல்லது பாகிஸ்தான் போல் ஆகியிருக்கும்!

## ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இந்தியக் கல்வித் துறைகள் அமைப்பு

1520 ஆம் ஆண்டிலே போர்ச்சுகீஸியக் குடியினர் தடம் சென்னையில் படிந்து விட்டது. தமிழில் அல்மேரா போன்ற போர்ச்சுகீஸியச் சொற்கள் கூடிக் கலந்தன! அடுத்து இந்தியாவில் 1600 ஆண்டு பிரிட்டனின் கிழக்கிந்தியக் கம்பெனி [East India Company] துவங்கி, 1639 ஆம் ஆண்டு சென்னையிலும், 1668 ஆம் ஆண்டு பாம்பேயிலும், 1699 ஆம் ஆண்டு கல்கத்தாவிலும் வர்த்தகத் துறைகள் ஆரம்பமாயின. பிறகு 1765 இல் ராபர்ட் கிளைவ் பிரிட்டிஷ் சாம்ராஜியத்துக்கு இந்தியாவில் அடிக்கல் நாட்டியதை நாம் அறிவோம். தென்னகத்தில் 1746-1760 ஆண்டுகளில் பிரெஞ்ச் ஆதிக்கம், தமிழகத்தின் சில பகுதிகளில் மேலோங்கி யிருந்தது! பிறகு ஆங்கிலேயர் அவர்களைத் தோற்கடித்து அவ்விடங்களைக் கைப்பற்றினர்! ஆயினும் பாண்டிச்சேரி பிரெஞ்ச் கைவசம் இருந்தது! (1757-1858) ஆண்டுகளில் பிரிட்டன் சிறிது சிறிதாக முழு இந்தியாவையும் கைப்பற்றித் தன்னாதிக்கத்தில் கொண்டு வந்தது.

துண்டு துண்டான இந்தியா 15 ஆம் நூற்றாண்டில் எப்படி இருந்தது ? தனித்தனி அரசர்களின் ஆட்சியில் சிக்கி, பிராந்திய மொழிகள் ஏதோ ஓரளவு வளர்ச்சி பெற்றன. இந்தியா மொகலாய மன்னர்களின் போர்க்களமாகி இந்தியக் கலாசாரமும், நாகரீகமும் நசுக்கப்பட்டு, மொழிகளின் வளர்ச்சியைக் கண்காணிப்போர் குறைந்து போயினர். ஐரோப்பிய நாடுகள் விஞ்ஞானத்திலும், தொழில் நுணுக்கத்திலும் முன்னேறி, அவற்றின் மொழிகள் வளர்ச்சி யடைந்து வரும் போது, இந்திய மொழிகள் புறக்கணிக்கப் பட்டு தளர்ச்சி யடைந்து வந்தன. பிறகு பிரிட்டன் இந்தியா வெங்கும் இரயில் பாதைகள் அமைத்து, பல இடங்களில் அஞ்சல் நிலையங்கள் கட்டி, கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் நிறுவகம் செய்து, ஆங்கிலத்தை முதன் மொழியாக்கி, இந்தியாவை இணைத்து முழு தேசமாக்கியது! பத்தாண்டுகளில் (1833-1843) முறையான கல்வித்துறை நிறுவகங்கள் இந்தியாவில் துவங்கக் காரணமான பிரிட்டனின் முக்கிய அறிவாளிகள்: மெக்காலே, எல்ஃபின்ஸ்டோன், திரிவேலியன் [Macaulay, Elphinstone, Charles Trevelyan] ஆகியோர்.

## தமிழகத்தில் விஞ்ஞானத் துறைகளின் வளர்ச்சி

பாரத அரசாங்கம் சென்னைக் கல்பாக்கத்தில் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தை நிறுவி, அணுவியல் ஆய்வுகளை நடத்தியும், அணுமின் சக்தியைப் பரிமாறியும் வருகிறது. தென்கோடியில் ரஷ்ய உதவியால் இரட்டை அணுமின் நிலையம் கூடங்குளத்தில் உருவாகி வருகிறது. ஆனால் விஞ்ஞானத் துறைகளை வளர்த்து, இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கத் தனியாகச் சென்னை மாநில அரசு என்ன முயற்சிகளைக் கையாள்கிறது என்பது தெரியவில்லை ? கலைக்காட்சி மாளிகைகள் [Art Museums] சில சென்னையில் உள்ளன. ஆனால் எத்தனை விஞ்ஞானக் காட்சி மாளிகைகளை [Science Museums] மாநிலத்தில் நிறுவி, ஆர்வமுள்ள தமிழரின் விஞ்ஞானச் சிந்தனைகளைத் தூண்டி விடுகிறது, தமிழரசு ? சினிமா இதழ்கள் நிறைந்த சென்னை மாநிலத்தில் எத்தனை விஞ்ஞான இதழ்கள் வாரவாரம் வெளியாகின்றன ? எத்தனைத் தமிழ்வார இதழ்கள், மாத இதழ்கள் விஞ்ஞானத்திற்குச் சில பக்கங்களை ஒதுக்கி, விஞ்ஞானச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன ?

இந்தியா ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் அடிமை நாடாக உழன்ற போது, விஞ்ஞான மேதை சி.வி. இராமனும், வேதாந்த மேதை இரவீந்திரநாத் தாகூரும் தனித்துவ நோபெல் பரிசைப் பெற்றார்கள். பாரதம் விடுதலை அடைந்து ஐம்பது ஆண்டுகள் கடந்த பின்னும், பாரதத்திலோ, தமிழகத்திலோ தனித்துவ நோபெல் பரிசு பெற, எத்தனை விஞ்ஞான வல்லுநர்கள் தலைதூக்கி நிற்கிறார்கள் ? இந்தியாவிலும் சரி, தமிழகத்திலும் சரி மாந்தரிடம் அறிவும் திறமையும் இருந்தாலும், விஞ்ஞானத்தில் ஆழ்ந்து ஆராய்ச்சிகள் செய்து நோபெல் பரிசு பெறத் தனித்துவத் தகுதியும், வேட்கையும், கடும் உழைப்பும் இல்லை என்று தீர்மானம் செய்வதா ? குறிப்பாகத் தமிழகத்தில் மற்ற கலைகளில் வல்லுநர் முன்னேறி இருந்தாலும், விஞ்ஞானத் துறைகளில் ஏதாவது ஒன்றில் மேன்மை மிக்க ஒருவர் கூட தற்போது இல்லை என்பது வெட்கப்பட வேண்டிய தகவல்!

## கலப்பற்ற தூயமொழிகள் உலகில் எங்கே உள்ளன ?

கலப்பற்ற 'தூயமொழி ' என்று பலர் பேசும் ஒரு வழக்கியல் மொழி, எங்காவது உலகில் தற்போது இருக்கிறதா என்னும் கேள்விக்குப் பதில் கிடைப்பது சிரமம்! வடதுருவத்துக்கு அருகில் எங்காவது நாகரீகக் காற்றுப் படாமல் வாழும் எஸ்கிமோ இனத்தவர், அல்லது நீலகிரி மலை உச்சியில் தனித்து வாழும் காட்டினத்தவர் பேசும் எழுத்தற்ற சில மொழிகள் கலப்பற்றுச் சுத்தமாக இருக்கலாம்! அவர்களில் பலரது மொழிகளுக்கு எழுத்துக்கள் கூட இல்லாமல் இருப்பதால், கலப்பதற்கு மூல வடிவங்களே இல்லாத அந்த வாய் மொழிகளைப் பற்றி இங்கே நான் குறிப்பிட வில்லை! எழுத்து வடிவங்கள் கொண்டு பல்லாண்டு காலம் பெரும்பான்மை இனத்தவர் பயன்படுத்தும், மொழிகளின் கலப்பற்ற தூய்மையைப் பற்றியே என் வினா எழுகிறது.

மனித இனங்கள் உலகெங்கும் தோன்றிய போதே அவற்றின் பேச்சு மொழிகளும் வளர்ச்சி யடைந்து, சிறுகச் சிறுக எழுத்து வடிவங்கள் பெற்றிருக்க வேண்டும். சமூகங்கள் நல்லாட்சி நிழலில் வளர்ந்து, நாகரீகம் அடைந்து, தொழில் வாணிபங்களால் செல்வம் பெருகிய பொற்காலத்தில், மொழிகள் 'இலக்கணக் கட்டுப்பாடுகள்' விதிக்கப்பட்டு இலக்கியங்களும், காவியங்களும் பிறந்திருக்க வேண்டும். தனித்தனி இனங்களின் இடப்பெயர்ச்சியாலும், அன்னிய இனத்தவர் படையெடுப்பாலும், வேறின மக்கள் கலந்து பிணைந்த போது, நாட்டு மொழிகளிலும் கலப்புச் சொற்கள் நாளடைவில் சேர்ந்தன! இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக வேதியர்கள் கையாண்ட சமஸ்கிருதத்தின் பிணைப்புத் தமிழ்மொழியில் சேர்ந்துள்ளதை நாம் ஏற்றுக் கொண்டு, அச்சொற்களையும் தமிழில் பயன்படுத்திக் கொள்வதுதான் அறிவுடைமையாகும்.

கலப்பற்ற தனித்தமிழ் நடையில் இலக்கியச் சொற்போர் நடத்தலாம். இலக்கியப் பாக்கள், நூல்கள், காவியங்கள் படைக்கலாம். ஆனால் நாளுக்கு நாள் வேகமாய் முன்னேறிச் செல்லும் விஞ்ஞான முற்போக்கு அறிவுக் களஞ்சியங்களைத் தனித்தமிழில் ஆக்க முடியுமா என்பதில் ஐயப்பாடு உள்ளது! ஆங்கிலம் உள்பட ஐரோப்பிய மொழிகள் எல்லாம் புது விஞ்ஞானச் சொற்களை அப்படியே ஏற்றுக் கொண்டு, படைப்புகளைப் புத்தக வடிவில் ஆக்கிக் கொள்ளுகின்றன. ஆனால் தமிழ் உள்பட பாரத மொழிகள் பல, அவ்விதம் விஞ்ஞான வளர்ச்சிகளைப் பின்பற்றி, அவ்வப்போது நூல் வடிவில் எழுதிக் கொண்டு வருகின்றனவா என்பது தெரியவில்லை! அதே சமயம், விஞ்ஞானச் சொற்களை எல்லாம் தனித்தமிழில் வடித்து விடலாம் என்று கனவு காண்போர் கனவை நான் கலைக்க விரும்ப வில்லை!

## ஆங்கிலம் விஞ்ஞான வளர்ச்சியைக் காட்டும் அகிலத்தின் பலகணி

ஏறக்குறைய 500 ஆண்டுகள் தமிழ்மொழி உள்பட எல்லா இந்திய மொழிகளும், ஆங்கிலம் போல் பூரண வளர்ச்சி யின்றி அடிமை மொழிகளாகப் புறக்கணிக்கப் பட்டுக் கீழ் நிலையில் கிடந்தன. 1947 இல் பாரதம் சுதந்திரம் அடைந்ததும், இந்திய மொழிகளும் விடுதலை பெற்றன.

(தொடரும்) ஆக்கம் : திரு.ஜெயபாரதன் .... கனடா

# சிரித்து வாழ வேண்டும்




ஒருவர் : பொண்ணு சுமாரத்தான் பாடுவா பரவாயில்லையா ?

மற்றவர் : பரவாயில்லை ! பையனும் சுமாராத்தான் சமைப்பான்

****************************

மனேஜர்: ஏன்யா இவ்வளவு லேட் ?

ஊழியர் : சாரி சார் , பஸ்ல வரும்போது அசந்து தூங்கிட்டேன்

மனேஜர் : ஆபிஸுக்கு வர்றதுக்குள்ள உனக்கு அப்பிடி என்ன அவசரம் ?

******************************

மகன் : அப்பா ! நீ இருட்டிலே நல்லா எழுதுவியா ?

அப்பா : ஓ ! நல்லா எழுதுவேனே !

மகன் : அப்பிடின்னா எங்கே இந்த ப்ரோகிரஸ் ரிப்போட்டில ஒரு கையெழுத்து போடு

( நன்றி : மாரூபின் நகைச்சுவை இணையத்தளம்)

# சிந்திக்கச் சில துளிகள்



- கல்வி மூலம் தன்னம்பிக்கை ஏற்படுகிறது. தன்னம்பிக்கை மூலம் தன்னுள் உறங்கிக் கிடக்கும் ஆன்மா விழித்துக் கொள்கிறது. கைக்கோ, வாளுக்கோ ஆற்றல் ஏது? ஆற்றல் முழுவதும் ஆன்மாவிலிருந்தே வெளிப்படுகிறது

சுவாமி விவேகானந்தர்

- ஆறு தரம் பூமியை வலம் வருதலும், பதினாராயிரம் தடவை காசியில் குளித்தலும், பலநூறு தடவை சேது ஸ்நானம் செய்தாலும் ஆகிய இவற்றால் கிடைக்கும் புண்ணியம், தாயைப் பக்தி பூர்வமாக ஒரு தரம் வணங்கினால் கிடைக்கும்.

திருமுருக கிருபானந்த வாரியார்

- எழுத்துக்கள் என்பதில் பல்வேறு வகை இருக்கின்றன. பிறரைச் சிந்திக்க வைக்கிற மாதிரி எழுதுவது ஒரு வகை. பிறரைப் புண்படுத்தாமல் எழுதுவது ஒரு வகை. பிறரை வைத்துச் சிந்திக்க வைப்பது ஒருவகை அப்படிச் சிந்திக்க மறுப்பபவர்களைச் சந்திக்கு இழுப்பது என்பது ஒருவகை.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்

(நன்றி பல்வேறு இணையத்தளங்கள்)

## அறிவித்தல்

- இவ்விதழில் வரவிருந்த அன்புடன் கவிதைப் போட்டியின் இரண்டாவது பரிசு பெற்ற கவிதையின் திறனாய்வு அடுத்த இதழில் வெளிவரும் என்பதை அறியத்தருகிறோம்.
- தமிழ்ப்பூங்காவின் இந்த இதழின் தாமதமான வெளியீட்டுக்கு மன்னி ப்புக் கோருகிறோம். ரமடான்,தீபாவளி, நத்தார், பொங்கள் இதழாக இது வெளிவருகிறது.

## இணையத்தள முகவரிகள்

- அன்புடன் --------- http://groups.google.com/group/anbudan?hl=en
- தமிழ் சிஃபி.காம் ------ http://www.tamil.sify.com/
- தட்ஸ் தமிழ் ---------- http://thatstamil.oneindia.in/
- வார்ப்பு --------- http://www.vaarppu.com/
- திண்ணை ------- http://www.thinnai.com/
- தமிழ் ஓவியம் ----- http://www.tamiloviam.com/unicode/main.asp
- நிலாச்சாரல் -------- http://www.tamiloviam.com/unicode/main.asp
- முத்துக்கமலம் ----- http://www.muthukamalam.com/
- பதிவுகள் ------- http://www.pathivukal.com/
- வீரகேசரி ----- http://www.virakesari.lk/VIRA/homeslide.asp
- குமுதம் --------- http://www.kumudam.com/
- விகடன் ------ http://www.vikatan.com/vc/2008/jul/vc.asp
- அந்திமழை - http://www.andhimazhai.com/kavithai/viewkavithai.php
- கீற்று --- http://www.keetru.com/
- தமிழ்வாணன் . காம் ---- http://www.tamilvanan.com/
- தமிழம்----- http://www.thamizham.net/
- அந்தோணி முத்து ..... http://mindpower1983.blogspot.com/
- அழகி .................... http://azhagi.com/



- கதை , கட்டுரைகளில் வரும் பெயர்கள் , சம்பவங்கள் கற்பனையே

- ஆக்கங்களில் வரும் கருத்துக்கள் , மற்றும் படைப்புக்களுக்கு , படைப்பாளிகளே பொறுப்பு

- ஏதாவது ஆக்கங்கள் வேறு இதழ்கள்,சஞ்சிகைகளில் இருந்து உபயோகிக்கப்பட்டிருந்தால் அவை தெளிவாக குறிப்பிடப்பிட்டுள்ளன

- பதிப்புரிமை அனைத்தும் சக்தி சக்திதாசனுக்கே உரித்தானது